Registered as a News paper in Sri Lanka

பக்கங்கள்:-பத்து

விலை ரூபா. 6.00

# வலம்புரி

Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | புரட்டாதி 18 | ஞாயிற்றுக்கிழமை | (05.10.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 290



துரித தபால்,பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk


## கோண்டாவிலில் நேற்று வீதி மறிப்பு

# இராணுவம்-மக்கள் மோதல்

# படையினர் துப்பாக்கிச் சூடு!

## 9 பொது மக்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

**கோண்டாவில் சந்திக்கும் டிப்போச் சந்திக்கும் இடையில் நேற்றுப் பொது மககள் நடாத்திய வீதி மறிப்புப் போராட்டத்தின் போது இராணுவத்திற்கும் பொது மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலைமை கட்டு மீறி பெரும் களேபரமாக வெடித்தது.**

**இக் களேபரத்தில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒன்பது பொது மக்கள் படுகாயமடைந்துள்ளனர்.**

**போர்க்களமாக மாறிய அப்பிரதேசத்தில் அமைதியை ஏற்படுத்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டனர்.**

யாழ்ப்பாணம் பிரதானவீதி, மடத்தடியில் நேற்று முன்தினம் பிறபகல் இராணுவக் கனரக வாகனம்,மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இரு இளைஞர்கள் பலியாகினர்.


இக் கோரவிபத்தில் கோண்டாவில் அன்னங்கையைச் சேர்ந்த மகாலிங்கம் லிங்கருபன் என்ற இளைஞர் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவத்தினால் கொதிப்படைந்த கோண்டாவில் உரும்பிராய்ப் பகுதி மக்கள், இராணுவத்தினர் மீது ஏற்பட்ட கடும் சினம் காரணமாக, இராணுவத்தினரின் போக்குவரத்தை முடக்கும் வகையிலும், தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையிலும், கோண்டாவில சந்திக்கும் டிப்போச் சந்திக்கும் இடையில் உள்ள இராணுவ முகாமை மையப்படுத்தி பலாலி வீதியை மூடி வீதி மறிப்புப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

சிறுவர்கள், பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள் என பெருந்திரளானோர் இப் பகுதியில் கூடி, போக்குவரத்தை மூடி சுலோகங்களுடன் அமர்ந்திருந்தனர்.மேலும் இளைஞனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சந்திகளில் சோக கீதமும் இசைக்க விடப்பட்டிருந்தது.

இவ்வேளையில் போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு வருகை தந்த இராணுவத்தினர் சம்பவத்திற்காக வருந்துவதாகவும், போராட்டத்தைக் கைவிட்டு கலைந்து செல்லு

(10ம் பக்கம் பார்க்க)

விபத்து நடந்த மடத்தடியில் படை யினர். ஆர்ப்பாட்டக்காரரை அடக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் காட்சி...





(மேலும் படங்கள் 4-ம் பக்கத்தில்)

## சமாதானத்தைக் குலைக்க இராணுவம் முயற்சிக்கிறது

### விபத்துச் சம்பவம் குறித்து இளம்பரிதி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இடம் பெற்ற விபத்துச் சம்பவத்தையடுத்து, பொலிஸாரும் இராணுவத்தினரும் மேற்கொள்ளும் அத்துமீறல்களை விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கண்டித்துள்ளார்.

இச் சம்பவம் குறித்து யாழ். மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட போது நிலைமையை விளக்கிய இளம்பரிதி, படையினரின் நடவடிக்கையை கண்டித்துள்ளார்.

கோரமான முறையில் இடம் பெற்ற விபத்துச் சம்பவத்தில, இரு இளைஞர்கள் பலியாகியுள்ளனர். இந் நிலையிலும் விபத்துக்கான தடயங்களை பொது மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் படையினர் அகற்ற முற்பட்டமையும், மக்களைத் தாக்கி கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியமையும், மக்களைச் சினம் கொள்ள வைத்தது டன், சட்டம் ஒழுங்கைப் பேண வேண்டிய பொலிஸாரே தடயங்களை அகற்ற முற்பட்டமை மக்களுக்கு ஆவேசத்தை ஏற்படுத்தியதென சுட்டிக்காட்டினார்.

படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் தொடரும் சமாதானத்தைக் குலைக்கவே எடுக்கப்பட்டு வரும் முயற்சி என்றும் அவர் கண்டித்துள்ளார். (இ)

## விபத்து நடந்த மடத்தடியிலும் படையினர்-மக்கள் கைகலப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதான வீதி திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலைச் சந்தியில் நேற்றுப் பொது மக்களுக்கும் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலைமை எல்லை மீறி பெரும் களேபரமாக வெடித்தது.

பொது மக்களும் படையினரும் ஒருவரையொருவர் தாக்க முற்பட்டமையினாலும், தாக்கியமையினாலும் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

யாழ்.பிரதான வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கோர விபத்தில் இரு இளைஞர்கள் பலியானதற்கு திருக்குடும்பக் கன்னியர் மட பாடசாலைக்கு அருகில், பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவக் காவலரணே காரணமாக இருந்துள்ளதால் அதனை அகற்ற வேண்டும் என்று கோரி அப்பகுதியில திரண்ட பெருந்திரளான பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்வார்ப்பாட்டப் போராட்டத்தை அடக்கப் படையினர் கடுமையான நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால் படையினருக்கும் பொது மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலைமை பெரும் களேபரமாக வெடித்து பெரும் பதற்றம் உருவானது.

போராட்டத்தை அடக்கவும் திரண்ட பொது மக்களை விரட்டவும் படையினர் குண்டாந்தடியடிப் பிரயோகம் மேற்கொண்டதுடன் கண்ணீர்ப் புகைக்குண்டுகளையும் வீசிக்

(10ம் பக்கம் பார்க்க)

## காயமடைந்தவர்களின் விபரம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மற்றும் யாழ்ப்பாணம் மடத்தடியில் நேற்று இடம் பெற்ற களேபரத்தில் காயமடைந்த பொது மக்களின் விபரம் வருமாறு;

தி.உதயகுமார் (வயது27), க.சுஜீதரன் (வயது 19), த.பவீதரன் (வயது 19), அ.லுட்சன்(வயது20), கபில்ராஜ்(வயது 16),கி.கருணாகரன் (வயது 23), ப.ரஜிவ்காந்(வயது 17), செ.மகேஸ்வரன் (வயது 27) த.தயீரன்(வயது 20), ரி.டயஸ் (வயது 28) ஆர்.இராஜேஸ்கர் (வயது22)

(இ-4,7,43,109)

## ரெலோ மத்திய குழு உறுப்பினர் மட்டக்களப்பில் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதியில் ரெலோ அமைப்பின் மத்திய குழு உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

சீலன் என அழைக்கப்படும் மூன்று பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் கிருபாகரன் (வயது-36) என்பவரே சுட்டுக்கொலை செய்யப்பட்டவராவார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது.

மட்டக்களப்பு ஆரையம்பதி பொதுச சந்தையில் பிரஸ்தாப நபர் சைக்கிள பாதுகாப்பு நிலையத்தில் கடமையில் இருந்த போது காலை 8.30 மணியளவில் அங்கு வந்த இனந்தெரியாத நபர்கள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பிரஸ்தாப நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# தமிழ் மொழி எழுத்தாக்கத்திறன் முடிபுகள் நேற்று வெளியாகின

(யாழ்ப்பாணம்)

உலக ஆசிரியர் நாளை முன்னிட்டு தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையும், தமிழ் வளர்ச்சிக் கழகமும் இணைந்து வடக்குக் கிழக்கு மலையக பள்ளிகளுக்கிடையே நடத்திய தமிழ்மொழி எழுத்தாக்கத் திறன் தேர்வு முடிபுகள் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் வெளியிடப்பட்டுள்ளன.

தேசிய நிலையிலும் வலய நிலையிலும் பரிசு பெறுபவர்களினதும் சான்றிதழ் பெறுபவர்களினதும் விபரம் வருமாறு;

**தேசியமட்ட முடிபுகள்**

திரு.பி. யோகராசா, ச-து.இறாணமடு இந்து ம.வி, சம்மாந்துறை வலயம்-செல்வி.கா.ஜெகதீஸ்வரி, யா-ஸ்கந்தவரோதயக் கல்லூரி, வலிகாமம் வலயம்-திரு.சின்னத்தம்பி விசுவாசம், கிளி-பூநகரி ம.வி-கிளிநொச்சி வலயம்-திருமதி க.சிறிதரன்,யா-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, தென்மராட்சி வலயம்-செல்வி ஜீவரஞ்சினி சின்னத்தம்பி, கிளி-வட்டக்கச்சி ம.வி, கிளிநொச்சி வலயம்

**வலயமட்ட முடிபுகள்**

**யாழ்ப்பாண வலயம்**

திரு.சுந்தரம் வைகுந்தநாதன், யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி-திருமதி விஸ்வதேவி புஸ்பநாதன், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி-திரு நாகேந்திரன் புவனேந்திரன், யாழ்.மத்தியகல்லூரி-திருமதி சத்தியபவானி, யாழ்.பெரியபுலம் ம.வி- திரு.மயிலுரங்கநாதன், யாழ்.ஆவரங்கால் நடராஜா இராமலிங்க.வித்

**வலிகாமம்வலயம்**

திரு.கா.சசிதரன், யா.அருணோதயாக் க்ல்லூரி-செல்வி பூதன் ஜெயமலர் யா.விக்டோறியாக் கல்லூரி-திரு.த.தயானந்தன், யா.இளவாலை மெய்கண்டான் ம.வி-திரு.க.சிறிக்குமரன், யாழ். ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயம்-திருமதி மகாலிங்கசிவம் கலைவாணி, யா.இராமநாதன் கல்லூரி.

**வடமராட்சி வலயம்**

திரு.து.ஜெயதேவன், யா.வெற்றிலைக்கேணி ம.வி-திரு.து.அருந்தவசீலன், யா.அம்பன் அ.மி.த.க. பாட்சாலை-திரு.தி. தருமலிங்கம், யா.ஞானசார்யாா கல்லூர்-செலவ் ஆ.கந்தசாமி, யா.நாகர்கோவில் ம.வி-திரு.த.முரளிதரன், யா. உடுப்பிட்டி.

**தென்மராட்சி வலயம்**

திரு.ம.மகேசன், யா.வீரசிங்கம் மகாவித்தி-திரு.வி.மகேந்திரன், யா.சாவகச்சேரி இந்துக் கல்லூரி-திரு.அருணாசலம் மனோரஞ்சிதன், யாழ்.சந்திரபுர ஸ்கந்தவரோதயக் கல்லூரி-திரு. க.ஈஸ்வரன், யா.மீசாலை வீரசிங்கம் ம.வி-திருமதி சந்திரதேவன், யா.சாவகச்சேரி இந்துக் கல்லூரி-திருமதி க.சிறிதரன், யா.சாவகச்சேரி இந்துக் கல்லூரி-

**தீவக வலயம்**

திருமதி பங்கயற்செல்வி யோகநாதன், யா.கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி- திரு அமிர்தேஸ்வரசர்மா மனோகரன், யா.கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி- திருமதி ஆனந்தகௌரி குமாரதாசன், யா.சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி-திரு. நடராசா கணேசமூர்த்தி, யா.கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி-திருமதி சுமதி சுரேந்திரன், யா.சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி. (ந)

## நுண்கலை வகுப்பு

(அளவெட்டி)

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய தொண்டர் சபையினால் நாடத்தபடவுள்ள நுண் கலை வகுப்புக்கள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி வகுப்பில் வயலின், மிருதங்கம், பண்ணிசை மற்றும் நடனம் ஆகியன பயிற்றுவிக்கப்பட வுள்ளன. (உ-83)

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் நடத்திவரும் உதைபந்தாட்ட இறுதிச் சுற்றுப் போட்டி உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றது.

இன்று பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும் இப் போட்டியில் சென் நிக்கிலஸ் அணி எதிர் கலைவாணி விளையாட்டு கழக அணியும், 5.15 மணிக்கு சென் நீக்கிலஸ் அணி எதிர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன. (உ-10)

## திருநாட் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னையின் வருடாந்த உற்சவத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச் சொரூபத் தேர்ப்பவனியும் இடம் பெறவுள்ளது. (உ-18)

# ரயில்வே ஊழியர் போராட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது

(கொழும்பு)

புகையிரத சேவையின் 52 தொழிற்சங்கங்கள் நேற்று முன்தினம் முதல் மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்து மீண்டும் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் மேற்கொள்ளப்பட்ட 48 மணிநேர அடையாள வேலை நிறுத்த காலத்தின் போது, சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ரயில்வே பரிசோதகர்களையும்,பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் சேவையில் இருந்து நீக்குமாறு கோரியே இப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் தங்கள் பிரயாணங்களைத் தொடரமுடியாது ஏமாற்றம் அடைந்த பிரயாணிகள் கொழும்பு கோட்டை உள்ளிட்ட ரயில் நிலையங்களில் குழப்பங்களை ஏற்படுத்தினர்.

இவ் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக 98 ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், 17 ரயில் எஞ்சின்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது இதனால் 10 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக ரயிலிவே அதிகார சபை அறிவித்துள்ளது. (தி-60)

## கால் முறிந்த வீரர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(வல்வெட்டித்துறை)

உதைபந்தாட்டப் போட்டியில் விளையாடிக் கொண்டிருந்த போது நிலத்தில் வீழ்ந்து கால் முறிந்த நிலையில் வீரர் ஒருவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட ஏழு பேர் கொண்ட சுற்றுப் போட்டியில் கடந்த வியாழனன்று கதிர்மலை கழுகு விளையாட்டுத் கழகத்தை எதிர்த்து யங்கமன் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் கழுகு விளையாட்டுக் கழகத்தின் சார்பில் விளையாடிய யாழ்.பல்கலைக் கழக 2ம் வருட மருத்துவ பீட மாணவனான துஷ்யந்தன் (வயது 23) என்பவரே காயமடைந்தவராவர். (பி-27)

## மூவர் தேவாரங்கள் ஒலிப்பதிவு நாடா வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கலாபூஷணம் தாவடியூர் கே.எஸ். ஆர். திருஞானசம்பந்தன் பாடிய மூவர் தேவாரங்கள் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று முற்பகல் 9மணிக்கு நல்லூர் கோயில் வீதியில் உள்ள கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் க.சிவராமலிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக ஆங்கில போதனைத்துறை வருகை விரிவுரையாளர் ச.விநாயகமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில்,வேதாந்த மட ஸ்ரீ சிவ குருநாத பீட குருபீடதிபதி ஸ்ரீமத் சோமஸ்கந்த வேள் சுவாமிகள் அருளாசியுரையும் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு வெளியீட்டுரையையும் நிகழ்த்தவுள்ளனர். (உ-10)

## பொ. ஜ. மு.வின் அடுத்த இலக்கு பாராளுமன்றக் கலைப்பு

(நமது நிருபர்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் அடுத்த மாதம் சமர்ப்பிக்கவுள்ள வரவு செலவுத் திட்டத்தை முறியடித்து பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான இரகசியத் திட்டம் ஒன்றை பொது ஜன ஐக்கிய முன்னணி தீட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வருடந்தோறும் நவம்பர் மாதத்தில் நிதியமைச்சரால் சமர்ப்பிக்கப்படும் நிதிக் கூற்று அறிக்கை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படுவது அவசியமாகும்.

இந் நிலையில், அடுத்தமாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிதி அறிக்கையை பாராளுமன்றத்தில் தோற்கடித்து, பாராளுமன்றத்தைக் கலைக்க பொதுஜன ஐக்கிய முன்னணி திட்டம் தீட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)


உங்கள் வலம்புரியின் வாரமலர்




சங்குநாதம்

- இடைக்கால வரைபு இறுதி வடிவம் பெறுகிறது.
- இராணுவ வாகனம் மோதி இளைஞர்கள் இருவர் பலி
- புலிகள் மீது மீண்டும் தடை அமெரிக்காவின் சதி அம்பலம்
- வியாசரின் பதில்கள்.
- பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

விலை ரூபா 14.00

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-14.00

சங்கு நாதம்

(06-12 ஒக். 2003) Sankunatham

# விடுதலைப்புலிகளின் திட்டவரைபிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது

## அமைச்சரவை பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளினால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனைகள் என்ன? என்பது பற்றி யாருக்கும் இதுவரை தெரியாது. இவ்வாறான நிலையில் பொது ஜன ஐக்கியமுன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் அவற்றினை எவ்வாறு எதிர்க்கமுடியும்.

இவ்வாறு அமைச்சரவை பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் குருநாகலில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு கூட புலிகளின் யோசனைகள் என்ன என்பது குறித்து இதுவரை தெரியாது.

தமிழீழவிடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைகால நிர்வாக சபைத் திட்டத்திலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது.

நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமானால் மக்கள் மத்தியிலும் அரசியல் கட்சிகளிடையேயும் நல்லதொரு அபிப்பிராயம் ஏற்பட வேண்டும்.

இடைக்கால நிர்வாகசபை ஒன்றை வடக்கு கிழக்கு பகுதிகளில் அமைப்பது மூலம் ஏற்படும் நம்பிக்கைகள் சமாதான முயற்சிகளை மீண்டும் தொடர்வதற்கு வழிவகுக்கும்.

சில கட்சிகளின் தப்பபிராயம் காரணமாகவே இன்று நாட்டில் சமாதானத்திற்கு எதிரான குரல் கள் எழுப்பபடுகின்றன இதனை சமாதானத்துக்கு எதிரான மக்கள் கொந்தளிப்போ அல்லது ஆர்ப்பாட்டம் என்றோ எவரும் கருதி விடக்கூடாது என மேலும் தெரிவித்தார். (தி-61)

# அதிகாரப்பரவலாக்கலை கைவிட்டால் மீண்டும் பேச்சுக்களை நடத்த தயார்

(கொழும்பு)

அதிகாரப்பரவலாக்கல் எண்ணத்தை கைவிட்டால் மாத்திரமே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து ஆலோசிக்கப்படும் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர் நாட்டின் நலன் கருதி ஏனைய அனைத்து விடயங்களும் இரண்டாம் பட்சமாகவே கருதப்படுகின்றன.

நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு சிறந்த கொள்கை ஒன்று அவசியம்.

அதன் அடிப்படையிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகள் இடையில் முறிவடைவதற்கு ஜனாதிபதியின் விடாப்பிடியே காரணம்,

ஆனால் அவரது இந் நடவடிக்கைகளில் தற்போது தளர்வு ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி-61)

## போயாதினநிகழ்வுகள

(யாழ்ப்பாணம்)

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் போயா தினமான எதிர்வரும் 9ஆம்திகதி அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகும் ஆன்மீக நிகழ்ச்சிகள் நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவு பெறவுள்ளன. (உ-18)

# தென்மராட்சியில் 6 இடங்களுக்கு நேற்று முதல் 24 மணிநேர மின்சாரம்

(மந்துவில்)

தென்மராட்சிப் பிரதேசத்திற்கு 24 மணிநேரமும் மின்சாரம் நேற்று முதல் வழங்கப்படுகிறது.

மேற்படி பிரதேசத்தில் உள்ள கைதடி,நுணாவில், சாவகச்சேரி, அரசடி மற்றும் மீசாலை, கொடிகாமம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மின்பிறப்பாக்கிகளை நேற்று யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் மற்றும் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் ஆகியோர் வைபவரீதியாக இயக்கி மின் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வில், மின்சார சபை முகாமையாளர் முத்து இரத்தினானந்தம், மின் பொறியியலாளர் எஸ். அமிர்தலிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

பல வருடங்களுக்குப்பின்னர் மேற்படி பகுதிகளுக்கு தற்போது நாள் முழுவதுமான மின்சாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-54,37)

## அடுத்த ஆண்டு அமுல்படுத்தப்படவுள்ள

# செயற்றிட்டங்கள் குறித்து இரு நாட் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டில் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள செயற்றிட்டங்கள் குறித்த இரு நாள் கருத்தரங்கு எதிர் வரும் 17,18 ஆம் திகதிகளில் யாழ். செயலகத்தில் அரச அதிபர் செ. பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் உள்நாட்டு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச உதவும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தவிர நூற்றுக் கணக்கான திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் இதில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். குடா நாட்டின் அபிவிருத்தி மற்றும் மனித வள மேம்பாடுகளுக்கு ஏற்ப புதிய திட்டங்களை அமுல்படுத்துவது, இவ்வாறு அமுல் படுத்தப்படும் திட்டங்களை சரியான முறையில் அனைவரும் பயன்பெறும்வகையில் பகிர்வுகளை மேற்கொள்ளுதல் ஒதுக்கப்படும் நிதியை திட்டமிட்டு பயன்படுத்துதல் ஆகியன குறித்து இக்கருத்தரங்கில் கருத்துபகிர்வு இடம்பெறவுள்ளது.

இதேவேளை, யாழ்.மாவட்டதில் பொது மக்களுக்கிடையே மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி, புனர்வாழ்வுத்திட்டங்களில் சமநிலை பேணப்பட வில்லையென பல்வேறு தரப்புக்களிலிருந்தும் கண்டனக் குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றமை குறிப்பிடததக்கது. (உ-4)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியின் இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9.00 மணிக்கு கல்லூரி கலையரங்கில் நவராத்திரி விழா கொண்டாடப்படவுள்ளது.

பா. திருமாறன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் மதுரகவி காரை எம். பி. அருளானந்தம் மற்றும் இராமநாதன் கல்லூரி ஆசிரியர் எஸ். சத்தியதாசன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளனர். (உ-18,37)

# பொதுமக்களின் பங்களிப்புடன் புதுக்குள வாய்க்கால் புனரமைப்பு

(கந்தர்மடம்)

வேலணைப் பிரதேசத்திலுள்ள நாவடிப்புலம் புதுக்குள வாய்க்கால் சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் வரை நீர்வடிந்தோடக்கூடியவகையில் ஆழமாக்கி புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

உலக உணவுத் திடடத்தின் அனுசரணையுடன் வேலணை விவசாய சம்மேளனத்தின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்று வரும் மேற்படி பணிகளில் அப்பகுதியைச் சேர்ந்த 50ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ் வாய்க்கால் புனரமைப்புப் பணிகள் முழுவதும் பூர்த்தியாகும் பட்சத்தில்,வேலணை அதிசய வைரவர் கோயிலுக்கு வடக்குப்புறமாக உள்ள சுமார் 15ஏக்கர் நிலத்தில் மழைநீர் தேக்கப்படும் இதனால், அயற்கிராமங்களிலுள்ள உவர் நீர்க்கிணறுகள் நன்னீராகமாற வாய்ப்புக்கள் உள்ளன.

இதேவேளை,இப்பகுதியில் தற்போது தரிசுநிலமாகவுள்ள இடங்களும் நாளடைவில் விளைநிலங்களாக மாறக்கூடிய வாய்ப்பும் உருவாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேசமயம்,மேற்படிப் பணிகளில் ஈடுபட்டுவருகின்ற பொது மக்களுக்குதினமும் தலா 115 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-112)

# இலங்கைப் படைப்பிரிவுகளின் 211 கொடிகளுக்கு ஆசி

(அனுராதபுரம்)

இலங்கைப்படையினரின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த 211 கொடிகளுக்கும் ஆசி வழங்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம் ஸ்ரீமகாபோதி விகாரையில் இடம் பெற்ற இலங்கை இராணுவப் படைப்பிரிவின் 54வது ஆண்டு நிறைவையொட்டிய பிரார்த்தனை வைபவத்தின்போதே இவ் 211 கொடிகளுக்கும் ஆசி வழங்கப்பட்டுள்ளது.

21வது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் கிட்டி ஆராய்ச்சி தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் படைத்தளபதி லயனல் பலகல்ல சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வணக்கத்திற்குரிய பல்லேகம ஸ்ரீனிவாச தேரர் பிரித் ஓதி கொடிகளை ஆசிர்வதித்ததன் பின்னர் அவ்வப் படைத் தளபதிகளிடம் அவற்றைக் கையளித்தார். (உ-18,63)

# நவராத்திரி பாமாலை

## பத்தாம் நாள்



### அன்பு பரவிடச் செய்திடுவாய்!

சீறிவரும் சிங்கத்தைப் போல
வீரதீரங்களைத் தரும் துர்க்கையே
சிறு விளக்கின் பிரகாசம் போல
சிங்காரமாய் அருளிடும் இலட்சுமியே
ஆடி அசைந்து வரும் அழகு மயில் போல
ஆயகலைகளை அருளும் கலைமகளே
அருள் தருவாய் என்றும் - இன்ப
அன்பு பரவிடச் செய்திடுவாய்

நிர்விகலா பாலகிருஷ்ணன்
வேம்படி உயர்தரப் பாடசாலை

### பசுமைக்கு வந்து விடும்

மாணவப் பருவமிது
மகத்தான தென்றெண்ணி - நீர்
மாண்பு மிகு கல்வி தனை
மயக்கமின்றிக் கற்றிடுவீர்
சோதனை வருமுன்னே - நீர்
சோர்வின்றிக் கற்று விட்டால்
சீராக எமக்கு சித்தி வந்துவிடும்!

கி.மனோராஜ் (கலைப்பிரிவு 2004)
யா/மீசாலை வீரசிங்கம் மகா. வி.

### கருணை புரியம்மா

வாணி வாணி கலை வாணி
கற்பவை நிலைக்க கலைவாணி
ஞானத்தைத் தருவாய் கலைவாணி
ஞாலம் போற்றும் கலைவாணி

சு.குருவரதன்
யா/சாவகச்சேரி இந்து கல்லூரி

### சிந்தையில் எல்லாம் நீயே

வெண் தாமரையில் உறைபவளே
சிந்தனைத் திரையில் உறைந்திடம்மா
சீர் பெறும் கலைகளைத் தந்திடம்மா
சிந்தையில் எல்லாம் நீயம்மா

சு.அபிஷேக சாயினி
யாழ்/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

### அருள்வாய்

வணக்கம் தாயே சரஸ்வதியே
மணக்கும் மனசில் வாழ்பவளே
கணக்கும் தமிழும் இன் கலை அறிவும்
சுணக்கம் இன்றிப் பெற அருள் வாய்

கீர்த்திகா-சிவபாலன்
யாழ்/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

# விபத்து நடந்த மடத்தடியில் நேற்றும் களேபரம்











# கோண்டாவிலில் மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம்







படங்கள்:டொறிங்ரன், பவன், ஜெராட்

# நாடிவரும் மாணவர்களின்

**ஆசிரியர் தினம் உலகம் முழுமையும் அனுட்டிக்கப்படுகின்ற இந் நாளிலே, கல்வித்துறையில் நீண்ட அனுபவம் மிக்கவரும், - மாணவர்களுக்கு நல் வழிகாட்டியாய் திகழும் ஒருவருடன் கலந்துரையாடி அவரது அனுபவத்தின் வாயிலான, எண்ணப்பாடுகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தபோது என் மனக்கண்முன்னே தோன்றியவர் ''ஆசிரிய மணி'' எம்.எஸ்.ஸ்ரீதயாளன்**

**யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளராக தற்போது கடமையாற்றி வருகின்ற இவர் சிறந்த பேச்சாளரும் சைவப்புலவருமாகத் திகழ்வதுடன், இலங்கைத்தீவு முழுமைக்குமான சமாதான நீதவானுமாக அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.**

**இலக்கியம், சமூகம், சமயம் என்கின்ற பல்துறைசார் பணிகளையும் ஒருங்கே ஆற்றி வருவதன் மூலம் இலங்கையில் மட்டுமன்றி தமிழர்கள் வாழ்கின்ற நாடுகளில் எல்லாம் நன்கு அறியப்பட்டவர் என்கின்ற ரீதியில் எனது தெரிவு நியாயமானது தான் என்று எண்ணிக்கொண்டு, அவரை நாடிய போது, இன்முகத்துடன் வரவேற்றார். வணக்கம் கூறி வினாக்களைத் தொடுத்தேன்.**

**● ஸ்ரீதயாளன் அவர்களே! முதலில், கல்வி முறைமையில் அன்றும், இன்றும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளைப் பற்றி கொஞ்சம் சொல்வீர்களா?**

வாழ்க்கையின் பயனை ஒவ்வொரு மனிதனும் பூரணமாக அடைவதற்கும், தான்வாழும் சமுதாயத்தினதும், அதனூடாக உலகத்தினதும் செம்மையான வளர்ச்சிக்காக இதயபூர்வமாகவும். ஒழுங்காகவும் உழைப்பதற்கும் கல்வியானது மிக இன்றியமையாதது. மனிதனை மனிதனாக வாழவாழி காட்டும் இக் கல்வியின் அவசியமும தேவையும், பயன்பாடுகளும் பல்வேறுகால கட்டங்களில் பல்வேறு பரிமாணங்களில் வளர்ச்சி பெற்றும், மாறியும் வருகின்றன. கல்வியை வழிநடத்தும் ஆசிரியர்கள், பயனாளிகளான மாணவர்கள் இவ்விரு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்படுகின்ற நிறுவனங்கள் என்ற வகையிலே கல்வியின்

நவீன ஆசிரியனின் பணி சார்ந்த வாண்மை மாணவனை முழுமையான கற்றலுக்கு வழிகாட்டுவதாக அமைய வேண்டும். ஆசிரியர்களின் முதன்மையான ஆதிக்கத்தின் கீழ் கரும்பலகையும் வெணகட்டியும், புத்தகங்களுமே துணையெனக் கொண்டிருந்த கற்பித்தல், போதனை முறையைகளால் மாணவர்கள் வகுப்பறையில் சிறைக் கைதிகளாக இருந்தார்கள். ஆசிரியரினது விரிவுரைகளுக்கு செவி

இங்கே நோக்கத்தக்கது. எங்களை நாடி வரும் பிள்ளைகளுக்கு ஆசிரியர்களாகிய நாங்கள் அவர்கள் ஆளுமைப்பண்புகளை இனங்கண்டு வழிகாட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். மென்மையான அவர்கள் இதயத்தை, மூளையை நல்ல வகையிலே முடுக்கி விடவேண்டும். மாறாக அதைச் சீரழிக்கக்கூடாது. ''We Should not Damage or Misuse Their Computors. மாணவரின் தேவை. ஊக்கம், கவர்ச்சி. நாட்டம்,

அறிமுகப்படுத்தி நடைமுறைப் படுத்திவருகிறார்கள்.

மூன்று செயலொழுங்குகளான கற்றல், கற்பித்தல், மதிப்பீடு என்பன முற்பட்டகாலங்களில் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் இருந்ததென்றும் அதனால் வகுப்பறையிலேயே மாணவர்கள் கற்கும்போதே, அவர்கள் குறிப்பிட்ட பாடஅலகில் எவ்வளவு தேர்ச்சியை அடைந்திருக்கிறார்கள் என்பதை சிறுசிறு அலகுப் பரீட்சைகள் மூலம் மதிப்பீடு செய்யவேண்டும் எனவும் அவர்கள் கண்டு வழிசொல்லியிருக்கிறார்கள். இது ஒரு நல்ல அம்சம். கற்றல் என்பது மாணவர்களின் நடந்தையில் ஏற்படும் மாற்றம் என்று கூறி, மாணவ நடந்தையை பல்வேறுபட்ட அவர்களது மனவெழுச்சி, திறங்கள் கொண்டும் தீர்மானிக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது வரைகாலமும் மாணவர்களுக்கு தவணைமுடிவிலோ, வருடமுடிவிலோ 10அல்லது 13 ஆண்டுகளின் பின்போ நடந்தப்படும் எழுத்

ஆசிரியர்களும் முனைந்திருக்கிறார்கள். சர்வதேசத்திலும் கடைப் பிடிக்கப்பட்டுவரும் இம்முறைமையில் சிக்கல்கள் இருப்பதாக கல்வி யுலகத்தில் ஒருசாரார் இன்னும் பேசிக்கொணடிருப்பதையும் நான் மனஉளைச்சலோடு குறிப்பிட வேண்டும். கற்றலுக்கான அதிக சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு வழங்குவது ஆசிரியரின் தலையாய கடமை என ''ஆனல்ட் கெசல்'' என்ற கல்வியாளர் வலியுறுத்தியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்னும், முன்னைய கற்றல், கற்பத்தல் முறைமையில் அறிவு, திறன், மனப்பாங்கு என்ற மூன்று விடயங்களுக்கு ஆசிரியர்கள் முக்கியம் கொடுத்த நிலை சற்று விரிந்து கணிப்பீட்டு முறைமையில் நாலாவது, ஐந்தாவது பண்பு களைகளான சமூக மயமாக்கற் திறன்களுக்கும் (Social Skills) கற்றலுடனான ஆளுமைப்பண்பு விருத்தியிலும் (Devoloping Personality of The Child Through Learning) முக்கியத்துவம் கொடுக் கப்

# ஆளுமைப் பண்புகளை தேடிப்பிடித்து

மடுத்து, அவர்களால் வழங்கப்படும் குறிப்புகளை மீண்டும் எழுதி அதனை மனப்பாடம் செய்து (Rote Learning) கேட்கப்படும் வினாக்களுக்கும், பயிற்சிகளுக்கும் மாத்திரம் விடை எழுதுகின்ற நிலை மாணவ மையக்கல்வியில் செல்



ஆசிரிய மணி எம்.எஸ். ஸ்ரீதயாளன்

தகுதி நிலை என்பவற்றை நவீன ஆசிரியன் மனங்கொண்டே தன் கற்பித்தலை ஆற்றவேண்டும்.

துப் பரீட்சைகளாகவே மட்டும் இருந்தன.

இப்போது கணிப்பீடுகள், அலகுப்

பட்டிருப்பது நோக்கத்தக்கது. இவ்விருபண்புகளிலும் ஆசிரியர்கள் மிகவும் கிரிசனை காட்டுவது அவசியமானது.

அதாவது அருகிலிருந்து அவதானித்து கற்பி என்ற கருத்தையுடையதே ''அசிடாறே'' என்றபதம். (Assidare) இந்த நோக்கிலே மாணவரை உன்னிப்பாக அவதானித்து அவனது பலத்தையும் பலவீனங்களையும் இனம் கண்டு மாணவர்கள் அவாவுறுகின்ற, விரும்புகின்ற வேளையில் கவர்சசிகரமான முறைமைகளை அனுசரித்து பெருமபாலும் மாணவனைச் செயற் படத்தூண்டிக் கற்கச்செய்வதே கணிப்பீட்டு முறைமைச் செயலொழுங்குகளில் முக்கியமானது என்பதை எல்லாத் தரப்பினரும் அறியக்கடமைப்பட்டுள்ளார்கள்.

தேவைக்கான தேர்ச்சி நிலையை மாணவன் அடைந்துவருகிறானா என்பதை வகுப்பறையிலேயே ஆசிரியர் கண்டறிகின்றாா. அதே நேரத்தில் மாணவன் தனாகவே தன்னுடைய தேர்ச்சிநிலையை அறித்து அடைவை மேம்படுத்த முயலவும் இக்கணிப்பீட்டுமுறைமை உதவுகிறது.

பாடசாலை மட்டக்கல்வி முறைமைக்கும் குறிப்பாக முன்னைய மதிபட்டு முறைமைக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை நோக்கும் போது மிகத்திறமையான மாணவர்களுக்கு அதிக சந்தர்ப்பங்களை வழ்ங்கி மெல்லக் கற்போரில் அதிகக் கவனமெடுக்காத ஆசிரியரின் போக்கில் இப்போது மாற்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நியமம் சார்ந்த பரீட்சை

## செவ்வி கண்டவர்: வித்தகன்

விளைவுகளும் வேறு வேறு அர்த்தங்களைத் தருகின்றன எனலாம்.

ஆதிகாலத்தில் கல்வியானது உயர் வர்க்கத்தினர் எனக் கூறப்பட்ட ஒரு சமூகத்தினருக்கேயுரியதானதாக இருந்தது. காலவளர்ச்சியில், அறிவு விருத்தியில் இக்கல்வியானது எல்லா மனிதருக்குமான உரிமையாக மாறியது. கீழைத்தேயத் தவர்களின் கல்வித்தேவை ஆதியில் அறநெறி, ஆன்மீகம் சார்ந்ததாகவே திகழ்ந்தது. படிப்படியாக .அது ஜீவனோபாய நோக்கிலும், உலகாயதபார்வையிலும் விஞ்ஞானயுகத்திற்கே ஈடுகொடுக்கக்கூடிய தாக வளர்ந்திருக்கிறது. ஆக கல்வி எழுத்தறிதல், எழுத்து அறிவித்தல் என்பதன் நோக்கம் ஆசிரியர், மாணவர் அறிவுச் செழுமையின, தேடல்களின் தாக்கத்தைப் பொறுத்தே அமைவதாய் இப்போது திகழ்கிறது. ஆரம்பத்தில், ஆசிரியர் சொல்வதை மாணவன் அப்படியே உள்வாங்கிக் கற்றான். பின்பு நூல்கள், புத்தகங்களில் மாணவன் அதிகம் தங்கியிருப்பவனாயும், ஆசிரியர்

வாக்கு இழந்து விடுகிறது. மாறாக ஆசிரியன் இன்று ஒரு வளவாளனாக, வழிகாட்டுபவனாக, கற்றலுக்கு தோள்கொடுப்பவனாக மாத்திரம் செயற்பட வேண்டியவன்(Facili Tator) ஆக தொழில் படுகிறான்.

அறிவுத்தேட்டத்துக்காக ஆசிரியரையே மாணவன் எதிர் பார்த்திருந்த, பயனற்ற துர்ப்பாக்கிய நிலையிலிருந்து மாறி, தானே மகிழ்ச்சியோடு தேடிக்கற்கின்ற நிலை வந்திருக்கிறது. ஆசிரியர் சொல்வதை மட்டும் கேட்டு, சேகரித்து விடையெழுதுகின்ற ஆசிரிய மையமுறைமையை (Receptive Learning) விட்டு, மாணவன் ஆசிரியர் வழிகாட்டலில் தானாகவே செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கற்கிறான். இதுவே நவீன கற்றல் முறையான கருத்தூன்றிய கற்றல் (Meaningful Learning) என்று கருதப்படுகிறது.

ஆசிரியரை நாடி வரும் மாணவர்களது மூளையானது வெற்றுப்பாத்திரம், வெள்ளைக் கடதாசி என்ற நிலை ஆதிகால

# வழிகாட்டுவது ஆசிரியர் கடமை

களினால் வழிகாட்டப்படுபவனாகவும் இருந்தான். இப்போது கல்வியானது மாணவரையே மையமாகக் கொண்டு கற்பிக்கப்படுகிறது.

**● நல்லது. ஆரம்பத்தில் கற்றலில் ஈடுபடும் மாணவனுக்கு முக்கியம் கொடுக்காத கல்வி, இன்று மாணவ மையக்கல்வியாக மாறியிருக்கிறது என்றீர்கள். இந்த மாணவ மையக்கல்வி பற்றியும் இன்றைய ஆசிரியர்கள் எவ்வாறு தொழிற்பட வேண்டும் என்பது பற்றியும் யாது கூறு வீர்கள்?**

கற்பித்தல் முறைமையிலேயே இருந்தது. ஆனால், சூழலை உன்னிப்பாகக் கவனித்துணரும் ஆற்றல், தகுதி நிறைந்தவர்களாகவே பிள்ளைகள் ஆசிரியரிடம் வருகிறார்கள் என்ற கருத்து வலுப்பெற்றிருக்கிறது. ''The Child Brain is Programmed To Scan The Environment, For The Patierns of Meaning'' என்ற வகையில் பிள்ளைகளின் மூளையானது பிறப்பிலேயே சூழலை உன்னிப்பாக, பொருத்தமாக அவதானித்துச் செயற்படக் கூடியதாகவே அமைக்கப்பட்டிருக்கிறது என்ற ''றொபேட் பிஸ்ஸர்'' என்ற அறிஞரின் கூற்று

**● எழுபதின் ஆரம்பத்தில் ஆசிரியப் பயிற்சிகள் பெற்று, கல்வியில் பட்டதாரியாகிய நீங்கள் புதியகல்வி முறைமைகள் பற்றி இப்போது பெறுகின்ற அனுபவங்கள் மூலம் கூறுவது யாது?**

இலங்கை அரசின் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவனம் என்பன கல்வியாளர்களின் உதவியோடு இலங்கைப் பாடசாலைகளில் 1997களின் முற்பகுதியிலே பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறைமையொன்றை மாணவர்களின் கற்றல் சீரமைப்புக்கென்று

பரீட்சைகளின் புள்ளிப்பெறுகளின் அடிப்படையிலேயே, பெரும்பாலும் மாணவர்களின் அறிவுசார் எழுச்சியோடு (Cognitive Ablity) (Affective Traits) மன எழுச்சிசார் பண்புகளையும், மேலாக உள இயக்க (Psychomotive Skills) பண்புகளையும் அளவிடுகின்ற தேர்ச்சிப் பரீட்சைகளாக இடம்பெறுவது காணத்தக்கது. எனவே மரபுரீதியாக இருந்த மதிப்பீட்டு (எழுத்து) பரீட்சைகளில் இருந்து செயல்முறைகளுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற கணிப்பீட்டுத் தேர்ச்சி முறைமைகளுக்கு இப்போது பாடசாலைகளில் கற்றல், கற்பித்தலில் ஈடுபடும் மாணவர்களும்,

களில் அடைவுப் பரீட்சைக்கோட் பாடுகள் புறக்கணிக்கப்பட்ட நிலை மாறி.

★ NORM REFRENCED-நியதி சார்ந்த சோதனை

★ CRITERION REFRENCED- பிரமாணம் சார்ந்த சோதனை.

★ IPSATIVE REFRENCED- முன்னடைவு சார்ந்த சோதனை என்ற மூவகை மதிப்பீட்டு முறை மைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக் கப்படுகிறது. இங்கே அலகு முன் னேற்றப் பரீட்சை, ஆற்றுகைகள், பரிசோதனைகள், செயல்முறைகள் என்பவையோடு கட்டாயமான ஒப்படை செய்யும் முறைமை பிரதானமாக இடம பெறுகிறது.

(செவ்வியின் தொடர்ச்சி நாளை)

# தென்னாபிரிக்க கிரிக்கெற் அணிக்கு
# பாகிஸ்தானில் பலத்த பாதுகாப்பு

பாகிஸ்தானுக்கு கிரிக்கெற் சுற்றுப் பயணத்தினை மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க கிரிக்கெற் அணியினர் கடந்த புதன்கிழமை பலத்த பாதுகாப்பின் மத்தியில் லாகூர் விமான நிலையத்தைச் சென்றடைந்தனர்.

இவர்களின விஜயத்தை முன்னிட்டு லாகூர் விமான நிலையத்தில் 150க்கும் அதிகமான விசேட கொமாண்டோ படையினர் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14 வீரர்களையும், 13 அதிகாரிகளையும் கொண்ட தென்னாபிரிக்க கிரிக்கெற் குழுவினரே பாகிஸ்தானுக்கான கிரிக்கெற் விஜயத்தினை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் பலத்த பாதுகாப்பின் மத்தியில் உடனடியாக ஹொட்டேல் களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தென்னாபிரிக்க கிரிக்கெற் அணியினை விமான நிலையத்தில் வைத்து வரவேற்ற பாகிஸ்தானுக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் மூசாமுல்லா இவர்களது வருகை மகிழ்சி தருவதாகவும் பாகிஸதானில அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்ற அசம்பாவிதங்களைப் பொருட்படுத்தாது பாகிஸ்தானுக்கு கிரிக்கெற் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க கிரிக்கெற் அணி, இங்கு பரபரப்பான போட்டிகளில் பங்குபற்றும் என்று எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பைக் காரணம் காட்டி பாகிஸ்தானுக்கான கிரிக்கெற் சுற்றுப்பயணத்தை தென்னாபிரிக்கா முன்னர் ரத்துச் செய்திருந்த போதும பாகிஸ்தானின் கோரிக்கைக்கு அமைய போட்டி அட்டவணைகளில மாற்றங்களைச் செய்து பாதுகாப்பு நிலைமைகளை மேலும் பலப்படுத்தியிருப்பதனாலும் தனது முன்னைய முடிவை மாற்றிக்கொண்டு தென்னாபிரிக்க கிரிக்கெற் அணி பாகிஸ்தான் சென்றிருக்கின்றது. பாகிஸ்தானுக்கும், தென்னாபிரிக்க அணிகளுக்கும் இடையில் இரண்டு டெஸ்ட போட்டிகளும், ஐந்து சர்வதேச ஒரு நாள் போட்டிகளும் இடம்பெறவிருக்கின்றன. (உ-68)

# முன்னாள் வீரர்களுக்கு
# கௌரவ அங்கத்துவம்

சிம்பாவே கிரிக்கெற் அணியின் முன்னாள் வீரர்களான அன்ரி.ஃ.பிளவருக்கும் கென்றி ஒலங்காவிற்கும் இங்கிலாந்தின் மெல்போன கிரிக்கெற்கழகம் கௌரவ அங்கத்துவத்தை வழங்கியுள்ளது.

சிம்பாவேயில் ஜனநாயகம் அழிந்து போயிருப்பதாகக் குறிப்பிட்டிருந்த இவர்கள் இருவரும் கடந்த உலகக்கிண்ண கிரிக்கெற் போட்டிகளின் பின்னர் சர்வதேச கிரிக்கெற் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளனர்.

சிம்பாவே அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரராகத் திகழ்ந்த அன்ரி.ஃ.பிளவரும், அணியின் முதல் கறுப்பினத்தவரான வேகப்பந்து வீச்சாளராகத் திகழ்ந்த கென்றி ஒலங்காவும் கடந்த உலகக்கிண்ண கிரிக்கெற் போட்டித் தொடரின் போது சிம்பாவே அதிபர் முகாபே மீது கடும் குற்றச் சாட்டுக்களைத் தொடுத்திருந்தனர்.

தமது எதிர்ப்பைக் காட்டும் விதமாக இவ் வீரர்கள் இருவரும் கடந்த உலகக்கிண்ண கிரிக்கெற் போட்டிகளின் போது கறுப்புப்பட்டி அணிந்து விளையாட்டில் தமது எதிர்ப்பையும் வெளிக்காட்டி இருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து எழுந்த பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக இங்கிலாந்திற்குச் சென்ற அன்ரி.ஃ.பிளவர் அங்கு எக்ஸ்.எக்ஸ்.பிராந்திய அணியுடன் 2வருட கிரிக்கெற் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளார்.

கென்றி ஒலங்கா இங்கிலாந்தின் கழக மட்டப் போட்டிகளில் விளையாடி வருவதோடு, தொலைக்காட்சி வர்ணணையாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

இவர்கள் இருவருக்குமே இங்கிலாந்தின் பழமைவாய்ந்ததும், உலகப்பழமைவாய்ந்ததுமான மெல்போன் கிரிக்கெற் கழகம் கௌரவ அங்கத்துவத்தை வழங்கியிருக்கின்றது. (உ-68)

# ஸ்ரீவ் வோவின் சமூகநல
# பணிகளுக்கு மேலுமோர் சான்று

இந்தியாவிற்கான அவுஸ்திரேலிய உல்லாசப் பயணத் தூதுவராக அவுஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெற் அணியின் தலைவர் ஸ்ரீவ்வோ நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் அவுஸ்திரேலியாவின் சிறு வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரினால் வழங்கப்பட்டுள்ளது.

கிரிக்கெற்துறைத் தொடர்புகளைத் தவிர இந்தியாவில் ஸ்ரீவ்வோ மேற்கொண்டு வருகின்ற சிறுவர் நல உதவிகள் மூலமும் அங்கு அவா நல்ல வரவேற்பை பெற்றிருக்கின்றார்.

இதேவேளை, கொல்கத்தாவில் மேலும் ஒரு சிறுவர் நலன்புரி நிலையத்தினை திறப்பதற்காக 5லட்சம் அவுஸ்திரேலிய டொலர்களைத் திரடடவும் ஸ்ரீவ்வோ எண்ணியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வருட இறுதியில் இந்திய கிரிக்கெற் அணி அவுஸ்திரேலியாவிற்கான கிரிக்கெற் சுற்றுப்பணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், அவுஸ்திரேலியாவின் சுற்றுலாத்துறையினை கிரிக்கெற் ரசிகர்கள் மத்தியில் பிரபல்யமான ஒன்றாக நிலைநிறுத்தும் முயற்சிகளில் ஒன்றாகவே ஸ்ரீவ்வோவின் இந்த நியமனம் கருதப்படுகின்றது.

கிரிக்கெற்துறை தவிர்ந்த சமூக நலப்பணிகள் பலவற்றில் ஈடுபட்டு வருகின்ற ஸ்ரீவ்வோவின் இந்த நியமனம் அந்த நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் இவரின் நன்மதிப்பிற்கு சான்றுபகரும் விடயம் என அவரின் ரசிகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-68)

# விமானப் படைக்கழகம்
# முதலிடத்திற்கு முன்னேறியது

இலங்கை பிறீமியர் லீக் கால்பந்தாட்டப் போட்டிகளின் இரண்டாவது சுற்றில் தான் பங்குபற்றிய 3 போட்டிகளிலும் வெற்றியீட்டியுள்ள விமானப்படை அணி. கழகங்கள் நிலையில் மொத்தமாக 35 புள்ளிகளைப் பெற்று முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.

15 கழகங்கள் பங்குபற்றுகின்ற இந்த பிறீமியர் லீக் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நடப்பு வருடச் சம்பியனான நீர்கொழும்பு யுத் கழகம் 34 புள்ளிகளைப் பெற்று 2ஆம் இடத்திலுள்ளது.

பொலிஸ் கழகமும், களுத்துறை புளூஸ்ரார் கழகமும் தலா 31 புள்ளிகளைப் பெற்றுள்ள வேளையிலும் கோல்கள் அடிப்படையில் பொலிஸ கழகம் 3ஆம் இடத்தையும், களுத்துறை புளூஸ்ரார் கழகம் 4ஆம் இடத்தையும் வகிக்கின்றன.

இதேவேளை, இராணுவக் கழகமும், இரட்ணம் கழகமும் 29 புள்ளிகளைப் பெற்றுள்ளன. எனினும், கோல்கள் அடிப்படையில் 5, 6ஆம இடங்களை முறையே இராணுவக் கழகம், இரட்ணம் கழகம் என்பன தக்கவைத்துள்ளன.

நீர்கொழும்பு யுப்பீற்றஸ் கழகம் 28 புள்ளிகளைப் பெற்று கழகங்களை நிலையில் 7வது இடத்திலும் கடற்படைக்கழகம் 25புள்ளிகளைப் பெற்று 8வது இடத்திலும் இருக்கின்றன.

21புள்ளிகளைப் பெற்றுள்ள யாவாலேன் கழகமும், 20புள்ளிகளைப் பெற்றுள்ள சவுண்டஸ் கழகமும் முறையே அடுத்த இரண்டு ஸ்தானங்களையும் வகிக்கின்றன. ஒல்ட்பென்ஸ், றினோன், மாத்தறை, ஹைலண், விக்ரறி ஆகிய கழகங்கள் கடைசி 5ஸ்தானங்களையும் வகிக்கின்றன. (உ-68)




# களத்தில் முரண்டு பிடிக்கும்
# ஆஸி. வீரர்களுக்கு அபராதம்

கிரிக்கெற் விதிமுறைகளை மீறி மைதானத்தில் கருத்துக்களை வெளிப்படுத்தினால், கிரிக்கெற் வீரர்கள், 5 போட்டித் தடைகளுக்கோ அல்லது ஆயுள்கால போட்டித் தடைக்கோ உட்படுத்தப்படுவார்கள். என அவுஸ்திரேலிய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது.

மைதானங்களில் நடுவரின் தீர்ப்பிற்கு முரணாகச் செயற்படும வேளையிலும் அல்லது தேவையற்ற வகையில் முறையீடுகளை மேற்கொள்ளப்படும் வேளைகளிலும் விளையாட்டு வீரர்களுக்கு அபராதம விதிக்கப்படவோ அல்லது அவர்கள் மீது ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதற்கோ இந்தப் புதிய நடத்தைக் கோவைகளில் இடமளிக்கப்பட்டிருப்பதாகவும்,

தமது வீரர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்து இந்த ஒழுக்கக் கோவையின மூலம் தெளிவான வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவுஸ்திரேலிய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை மேலும் தெரிவித்துள்ளது. (உ-68)

# மைக்டைசன் ஓராண்டு
# சிறைவாசம் அனுபவிக்க நேரிடும்

பெண்ணொருவர் உட்பட மூவரைத தாக்கிய வழக்கில் பிரபல குத்துச்சண்டை வீரர் மைக்டைசனுக்கு ஓராண்டு சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவர் இந்த ஆண்டின் தொடக்கத்தில் நியூசிலாந்தில் இருக்கின்ற ஹொட்டேல் ஒன்றில் பெண்ணொருவர் உட்பட மூவரைத் தாக்கியதாக புகார் செய்யப்பட்டிருந்தது.

இது குறித்து மைக்டைசன் மீது 3 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணைகளுக்காக இவர் கடந்த செவ்வாய்க்கிழமை நியூயோர்க் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

இதேவேளை அன்று டைசன் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் வழக்கை தாக்கல் செய்துள்ள மூவருமே முதலில் டைசனைத் தாக்கியுள்ளனர். இதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே அதாவது தற்பாதுகாப்பு நிமித்தம் டைசன் அவர்களைத் திருப்பித் தாக்கியிருந்தார்.

எனவே டைசன் குற்றமற்றவர் என்றும் அவருக்கு விடுதலை வழங்கப்பட வேண்டும்என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கின் அடுத்த கட்ட விசாரணைகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் இடம்பெறவிருக்கின்றன.

எனினும் குற்றம் நிரூபிக்கப்படுமானால் மைக்டைசனுக்கு ஓராண்டு சிறைத்தண்டனை விதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-68)

## உலகக்கிண்ண கால்பந்தாட்டம்
# தென்னாபிரிக்காவில் நடத்த
# நைஜீரியா விட்டுக்கொடுப்பு

2010ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளின் இறுதிச் சுற்றை நடத்துவதற்கான விண்ணப்பத்தை நைஜீரியா வாபஸ் பெற்றுள்ளது.

நிதி நெருக்கடியைக் காரணம் காட்டியே நைஜீரியா இந்தப் போட்டிகளை நடத்துவதிலிருந்து வாபஸ் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளின் இறுதிச் சுற்றை ஆபிரிக்க நாடு ஒன்றில் நடத்துவதற்கு சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனம் சம்மதம் தெரிவித்திருந்தது. இதற்கமைய தென்னாபிரிக்கா, மொறாக்கோ எகிப்து ஆகிய நாடுகளுடன் நைஜீரியாவும் விண்ணப்பத்தைத் தாக்கல் செய்திருந்தது.

எனினும், நிதி நெருக்கடி காரணமாக தனது விண்ணப்பத்தினை வாபஸ் வாங்கியிருப்பதாக குறிப்பிட்டுள்ள நைஜீரியா, தென்னாபிரிக்காவில் இப்போட்டிகளை நடத்துவதற்கான தனது பூரண ஆதரவினை வழங்கப் போவதாகவும் தெரிவித்துள்ளது. (உ-68)

# உதைபந்தாட்டப் போட்டியின்
# இறுதி ஆட்டம் தாய்லாந்தில்

ஆசிய நாடுகளின் லீக் உதைபந்தாட்ட போட்டிகளில் சம்பியனாகும் அணிகளுக்குமிடையிலான இறுதியாட்டம் ஐக்கிய அரபு இராட்சியத்தில் நடைபெற்றது.

இந்த இறுதிப் போட்டியில் முதலாவது சுற்றில் தாய்லாந்து பெக்பேரோ கழகத்தை எதிர்த்தாடிய ஐக்கிய அரபு இராட்சியத்தின் அல்எயின் கழகம் 2:0என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இவ்விரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்றின் இறுதியாட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி தாய்லாந்தில் நடைபெறவுள்ளது. (தி-61)

# அமெரிக்காவும் சுவீடனும
# அரையிறுதிக்குத் தகுதி

பெண்களுக்கான உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளின் அரையிறுதியாட்டத்தில் விளையாடுவதற்கு நடப்புச் சம்பியனான அமெரிக்காவும் சுவீடனும் தகுதி பெற்றுள்ளன.

ஐக்கிய அமெரிக்காவின் பொஸ்ரன் விளையாட்டரங்கில் கடந்த வியாழனன்று நடைபெற்ற கால் இறுதிப் போட்டி ஒன்றில் நோர்வே அணியினை எதிர்த்து விளையாடிய அமெரிக்க அணி 1:0என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம நடைபெற்ற மற்றுமொரு கால் இறுதிப் போட்டியில் பிறேசில் அணியை எதிர்த்து விளையாடிய சுவீடன் அணி 2:1என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

இதேவேளை, மற்று மிகுகால் இறுதிப் போட்டிகளில் ஜேர்மனி மற்றும் ரஷ்ய அணிகளும் சீனா மற்றும் கனடா அணியும் மோதவிருக்கின்றன. இதில் வெற்றிபெறும் அணிகள் அரையிறுதிப் போட்டியில் முறையே சுவீடன், அமெரிக்க அணிகளை எதிர்த்து விளையாடவுள்ளன. (உ-68)

# பாதுகாப்புப் பணியில் 600பொலிஸார்

இந்திய மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையில் இடம்பெறவிருக்கின்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில் 600 பொலிஸாரும், சிறப்புப் பாதுகாப்புப் படையினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படவிருப்பதாக குஜராத்தின் கிரிக்கெற் சங்கம் தெரிவித்துள்ளது.

நியூசிலாந்து கிரிக்கெற் அணியானது தற்போது இந்தியாவிற்கான கிரிக்கெற் சுற்றுப் பயணத்தினை மேற்கொண்டுள்ளது. இவ் அணி இந்திய அணியுடனான 2 டெஸ்ட போட்டிகளை எதிர்கொள்ளவுள்ளது.

முதலாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டி அஹமதா பாத்திலுள்ள சப்காஷ் படேல் மைதானத்தில் இம்மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது. ஏற்கனவே இந்த மைதானத்தின் நிலைமைகளை நியூசிலாந்து உயர் மட்ட பாதுகாப்புக் குழு பார்வையிட்டு திருப்தி வெளியிட்டிருக்கின்றது. (உ-68)

## சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

வேளாள குடியைச் சேர்ந்த அனலைதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தில் சொந்த வீடுடைய விஞ்ஞானப் பட்டம்பெற்ற (விவசாய பீடம்) அரசாங்க வேலை பார்க்கின்ற 23.10.1970ஆம் ஆண்டு பிறந்த கிரக பாபசங்கியை 2 4/16 கொண்ட ஆயிலிய நட்சத்திரம் முதலாம் பாதத்தையுடைய நட்புப் பெற்ற ஏழில செவ்வாய் கொண்ட பெண்மணிக்கு பொருத்தமான மணமகனைத் தேடுகின்றோம். வெளியூரில் வதிவோரும் தொடர்பு கொள்ளலாம் (நேரில் அலலது கடிதமூலம்) V.A.சிவராசா சோதிடர் இல:1 பழம்றோட் கந்தர் மடம் யாழ்ப்பாணம். (7655)

### சிறப்பு வழிபாடு

(அளவெட்டி)

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் மானம்பூ திருவிழாவையொட்டி இன்று பி.ப. 2.00மணிக்கு சிறப்பு ஆராதனை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

அத்துடன் வழமைபோல் தவளக கிரி முத்துமாரியம்மன் வீதியுலா கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத் தைச் சென்றடைந்து, அங்கு மானம்பூத் திருவிழாவும் நடைபெறவுளளது. (உ-83)

### கோகிலாமகேந்திரன் இத்தாலி பயணம

(அளவெட்டி)

இத்தாலியில் நடைபெறவுள்ள உளவியல் பயிற்சிப்பட்டறை ஒன்றில் கலந்து கொள்வதற்காக வலிகாமம வலயக் கல்விப்பணிப்பார் திருமதி கோகிலா மகேந்திரன் அங்கு சென்றுள்ளார்.

இரண்டு வாரங்கள் நடைபெறவுள்ள மேற்படி பயிற்சிப் பட்டறையில் உலகின பல பாகங்களிலும் உள்ள உளவியல் நிபுணர்கள் பலா கலந்துகொண்டு விரிவுரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(உ-83)

### ஆசிரியர் தினவிழா

(அளவெட்டி)

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் நாளை காலை 9.30 மணிக்கு ஆசிரியர் தினவிழா சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. (உ-83)

# பிறந்த நாளின் பலன்களை அறிந்து உங்கள் வாழ்வை இன்பமாக்குங்கள்

## சோதிடபலன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### பிறந்தநாள் பலன்

**ஜூன் 21 ஆம் திகதியிலிருந்து ஜூலை 20 ஆம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கான பலன்களை.**

எதை எடுத்தாலும் மாறுபட்ட கருத்துடையவர்களாகவோ இந்த மாதத்தில் பிறந்தவர்கள் விளங்குவார்கள். குடும்பத்தைப் பொறுத்த வரையில் இவர்களுக்கு மிகுந்த அக்கறை உண்டு. ஆனால், அமைதியின்றி எப்போதும் மாறுதலையும் பயணங்களையும் விரும்புவார்கள். குடும்பத்தில் இவர்களுக்கு அமைதி என்பது குறைவாகவே இருக்கும்.

### பொருள்சேர்ப்பதில் ஆர்வம்

பண விஷயங்களில் மிகுந்த ஆவல் கொண்டவர்களாக இருப்பவர்கள் பணம் சேமிக்க மாபெரும் செயல்களை செய்வார்கள். எதிர்பாராத ஏற்றங்களும் இவர்களுக்கு வாழ்க்கையில் உண்டு. ஆனால் இந்த மாற்றங்கள் அனைத்தும் இளம் பருவத்திலேயே ஏற்பட்டு விடும். விடா முயற்சியால் தான் இவர்கள் முன்னுக்கு வருவார்கள் ஆனால், ஒருதடவை முன்னுக்கு வந்துவிட்டால் தொடர்ந்து அந்த நிலையில் நட்புக்கொள்ளும்-சற்றும் இறங்காத திறமை இவர்களிடம் உண்டு.

எதிர்காலம் எப்படி இருக்குமென்று ஊகங்கள், தொழிலில் பெரும் பணம் தேடவே இவர்கள் அடிக்கடி முயற்சி செய்வார்கள். சூதாட்டங்களில் இவர்கள் பணத்தை இழந்து விட வாய்ப்பு உண்டு. ஆனால், தொழிலில் இவர்கள் பெரும் வெற்றியைக் காணுவார்கள்.

### அதிர்ஷ்டம்

எந்த வேலையிலும் உழைப்பை நம்பியே இவர்கள் வாழ்வார்கள் அதற்கு ஏற்றாற் போல் அதிர்ஷ்டம் என்பது இவர்களுக்கு எப்போதுமே கைகொடுப்பதில்லை. எதிர்பாராத மாற்றங்கள், நல்லவைகளாக இருந்தாலும் தீயவையாக இருந்தாலும் அடிக்கடி இவர்கள் வாழ்க்கையில் ஏற்படும்.

நல்ல கற்பனைத்திறன் இயற்கையாகவே இவர்களுக்கு உண்டு. ஆகையால், ஓவியராகவோ, எழுத்தாளராகவோ, கவிஞர்களாகவோ, இசை அமைப்பாளர்களாகவோ வர வாய்ப்பு உண்டு. காதலில் இவர்களுக்கு மிகுந்த ஆர்வமுண்டு. மற்றவர்களிடம் அன்புடனும் தன்மையுடனும் நடந்து கொள்வார்கள்.

மற்றவர்கள் சொல்லுவதைத் தான் கேட்க வேண்டும் என்பது இவர்களுக்கு அடியோடு பிடிக்காது. தன்னை நம்புகிறவர்களிடம் இவர்கள் மிக உண்மையாக நடந்து கொள்ளுவார்கள்.

### தொழிலில்ஆர்வம்

தாம் வேலைசெய்யும் இடங்களில் ஒழுங்காக வேலைசெய்வார்கள். தமது முதலாளி உயரவேண்டும்; அதையொட்டித்தான் நம் உயர்வு என்று இவர்கள் எண்ணுவார்கள்.

மிகவும் இளகிய தன்மையுள்ளவர்களாக இவர்கள் இருப்பதால், இவர்களை மற்றவர்கள் புரிந்து கொள்ளாவிட்டாலும், மற்றவர்கள் பாராட்டா விட்டாலும், ஊக்கம் அளிக்காவிட்டாலும், மனச்சோர்வு அடைந்து துன்பத்தை அடைகிறார்கள்.

இவர்களில் பெரும்பாலானோர் ஆத்ம ஞானிகளாக விளங்குவார்கள். உலகத்தின் புரியாத மர்மங்களைப் பற்றி அறிந்துகொள்ள விளைவார்கள்.

இளம் வயதில் இவர்கள் மணம் செய்து கொள்ளவே கூடாது. இவர்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் இவர்களுடைய குணம் மாறுவதால், இளமையில் மணம் செய்துகொள்வது மிகத் தவறு. எந்தவொரு செயலிலும் முதலில் விரைவுடன் இறங்கி விடுவார்கள். பிறகு, மற்றவர்கள் வியக்கும்படி அந்த வேலையை அப்படியே விட்டு விடுவார்கள். அல்லது, பின்வாங்கி விடுவார்கள்.

இளம் வயதிலேயே இவர்கள், முன்கூட்டி எதையும் காணும் திறமையினால் பணம் சேர்த்தால் தான் உண்டு.

இவர்கள் உயாந்த நிலைகளுக்கு வரமுடியும். பெரும் புகழையும் அடைவார்கள். அப்போது, இவர்களைப் பற்றி அனைவரும் அறியும்படியான வாய்ப்பு ஏற்படும். குடும்ப வாழ்க்கையில் இவர்கள் பெரும் துன்பங்களைக் காணவேண்டி வரும். உலகத்தின் கண்முன் எவ்வளவுதான் வெற்றிவீரர்களாக இருந்தாலும் இவர்களால் மகிழ்சியுடன் இருக்கவே முடியாது.

மாபெரும் திட்டங்களைத் தாம் இவர்கள் எப்போதும் கனவு காணுவார்கள். மற்றவர்களுக்காக சிறந்த பணிகளில் இறங்குவார்கள். ஆனால் மற்றவர்கள் இவர்களை குறை கூறத் தொடங்கிவிட்டால், வெறி பிடித்தவர்களைப் போல் நடந்து கொள்வார்கள்.

ஆழ்ந்த அன்பு இவர்களிடம் இருந்த போதிலும் அதைச் சிலர் வெளியே காட்டிக்கொள்வதில்லை. ஆகையால் இவர்கள் எப்போதும் கடுகடுப்புடன் இருப்பதாகவே மற்றவர்கள் நம்புகிறார்கள்.

இவர்களுக்கு மிக எளிய ஞாபக சக்தி உண்டு. எல்லா விஷயங்களையும் இவர்கள் தமது மனத்தில் பதிய வைத்துக்கொள்வார்கள் உள்ளத்தின் தத்துவங்களிலோ, ஆத்ம தத்துவங்களிலோ, மதத்தத்துவங்களிலோ இவர்கள் நிபுணர்களாக இருப்பார்கள்.

நம்மைச் சேர்ந்தவர்கள் என்று இவர்கள் எண்ணுபவர்கள் மீது ஆழ்ந்த அன்பு செலுத்துவார்கள். குடும்ப வழக்கங்களுக்கும், பரம்பரை வழக்கங்களுக்கும் இவர்கள் மிகுந்த ஆதரவு தருவார்கள்

### உடல் நிலை

வயிற்றில் அமிலக் கோளாறுகள் இவர்களுக்கு ஏற்படும். அடிக்கடி பேதி உண்டாகும். மீன் உணவை இவர்கள் தவிர்ப்பது நல்லது, வாயு, வீக்கங்கள், கால்கள் பாதங்கள் தொடர்புகொண்ட நோய்கள் இவர்களை அடிக்கடி தாக்கும்.(தொடரும்)

# தென்னிலங்கை ஊடகங்களின் தவறான செய்திகளால் சமாதானம் பாதிப்படைகிறது

## திருமலை அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் சாடல்

(திருகோணமலை)

திருகோணமலையில் பல இடங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முகாம்கள் இருப்பதாகக்கூறி வருபவர்கள் நேரில் வந்து எமக்கு அங்குள்ள முகாம்களை காட்டுவார்களா? என தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் வினா எழுப்பியுள்ளார்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலைய ஏற்பாட்டில் திருகோணமலை அரசியல்துறை செயலகத்தில் அண்மையில் இடம் பெற்ற தென்னிலங்கைப் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திலக் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றி விடுதலைப்புலிகள் 14 முகாம்களை அமைத்து போரிற்கு தயாராகி வருவதாக தெற்கில் உள்ள அரசியல்வாதிகள் கூறும் பொய்த் தகவல்களின் உண்மைத் தன்மையை அறியாமல் தென்னிலங்கை ஊடகங்கள் செய்திகளை வெளியிடுவதனால் அவை சமாதான முயற்சிகளை பாதிக்கின்றன.

அத்துடன் குரங்குபாஞ்சான் முகாம் தொடர்பாகவும் இந்த ஊடகங்கள் தேவையற்ற செய்திகளைப் திரித்து வெளியிட்டு வருகின்றன இதனால் வீண் குழப்பங்கள் எழுந்துள்ளன.

உண்மையிலேயே இந்த முகாம்கள் அரச கட்டுப்பாடற்ற பிரதேசத்திலேயே அமைந்திருக்கின்றன. நீண்டகாலமாகவே இந்த முகாம் இந்தப் பிரதேசத்தில் உள்ளன.

இவைதவிர தோப்பூர் சின்னக் கிண்ணியா ஆகிய பகுதிகளிலும் விடுதலைப்புலிகள் முகாம் அமைத்து வருவதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. ஆனால் இந்தச் செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை என்று அவர் மேலும் விளக்கம் அளித்தார். (உ-63,10)

# மாணவர் மத்தியில் புதிய கண்டுபிடிப்புக்களை ஊக்குவிக்க போட்டி

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களின் திறன் களை விருத்தி செய்வதற்கான புதிய கண்டுபிடிப்புக்கள் தொடர்பான போட்டி ஒன்று எதிர்வரும் 27, 28ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கான சுற்றுநிருபம் சகல வலயக் கல்விப் பணிமனைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அச்சுற்று நிருபத்தில், எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் காட்சிப் பொருட்களை பூரணப்படுத்தியிருக்க வேண்டும் என்றும் காட்சிப் பொருட்கள ஒரு புத்தகமாகவோ புதுப்புனைவாகவோ இருப்பதுடன் வர்த்தக நோக்கிலான உற்பத்திக்குரிய வாய்ப்பைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இப் போட்டியில் பங்கு பற்றுவோர்களுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி இன்றாகும். (உ-34)


# வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

(ஊர்காவற்றுறை)


ஊர்காவற்றுறை கிழக்கில் யு.என்.எச்.சி.ஆர்.நிறுவனத்தின் அனுசரணையுடன் போரூட் நிறுவனம் வீடுகள் மற்றும் மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

மேற்படி பகுதியில் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளில் குடியிருக்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழ்ப்பட்ட குடும்பங்களிற்கே இவை அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

அதேசமயம், ஜே-49 கிராம அலுவலர் ஜே.பத்திநாதன் மற்றும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் ஆகியோர் மேற்கொண்ட முயற்சிகளின் பலனாகவே மேற்படி பகுதியில் 17வீடுகளும், 17மலசல கூடங்களும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)



வண்ணார்பண்ணை காளிகோவிலடி ஞானக்குழந்தை பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யா/இளையதம்பி இந்து வித்தியாலய அதிபர் மு.செல்லையா மற்றும் பிரமுகர்கள் அமர்ந்திருக்கின்றமையை படத்தில் காணலாம்.



யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவிலே பிரதம விருந்தினராக பங்கேற்ற பேராசிரியர் அ.சண்முகதாஸ் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சம் மற்றும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

படம்:தனங்கிளப்பு நிருபர்

## இன்று ஒரு தகவல்

# மனச் சாந்தி

நிறையப் பேர் கூறுவார்கள் நான் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்று நினைக்கின்றேன் நேரம் கிடைப்பதில்லை. புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்று நினைக்கின்றேன் நேரம் கிடைப்பதில்லை. உறவினர்களுடன் கலந்துரையாட வேண்டும் என்று நினைக்கின்றேன் நேரம் கிடைக்கவில்லை என்று கூறுவார்கள்.

உண்மையில் இவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை என்றில்லை. நேரத்தை அதற்காக இவர்கள் ஒதுக்கவில்லை என்பது தான் உண்மை. ஒரு வேலையை நாம் செய்யவேண்டுமா? அதனைச் செய்வதனால் எனக்கு என்ன பயன் என்று கேள்வியைக் கேட்டுக் கொண்டு அதனால் பயன் அதிகம் உண்டென்று மனதில் உணர்ந்தால் அந்த வேலையை நாம் கண்டிப்பாகச் செய்வோம். ஒரு போர்க்களம் அங்கு இராணுவ வீரர்கள் பள்ளங்களை வெட்டி அதனுள் இருந்து கொண்டு சண்டை செய்கின்றனர். அடுத்தடுத்து அநேகமான பள்ளங்கள். ஒரு பள்ளத்தில் ஒரு போர்வீரனும் அவனது தளபதியும். அடுத்தபள்ளத்தில் ஓர் போர்வீரனும் தளபதியும் இப்படியே நின்று கொண்டிருக்கின்றனர். வெளியே குண்டு பாய்ந்துகொண்டிருக்கின்றது. கிரைனெற் வெடித்துக்கொண்டிருக்கின்றது.

பக்கத்தில் உள்ளதொரு பள்ளத்தில் ஒரு கிரைனெற் விழுந்து வெடிக்கின்றது. அப்போது ஒரு இராணுவ வீரன் தனது தளபதியிடம் கூறுகின்றான். ‘‘சார் அடுத்த பள்ளத்தில் எனது நண்பன் உள்ளான் நான் சென்று அவனைப் பார்த்துவிட்டு வருகின்றேன். எங்களுக்குள்ளே ஒரு புரிந்துணர்வு உள்ளது. யார் மீது குண்டு விழுந்தாலும் மற்றவர் வந்து அவருக்கு உதவிபுரிய வேண்டும் என்று’’ எனக் கூறினான்.

அப்போது தளபதிகூறுகிறார் ‘‘இப்போது வெளி நிலைமை சரியில்லை. அபாயகரமான சூழலாக இருக்கின்றது. உனது உயிருக்கு ஆபத்து ஏற்படும்’’ என்றார். வீரனோ இல்லை. ‘‘சார் நான் அவசியம் போயே ஆகவேண்டும்’’ என்றான். சரி என்று கூறிவிட்டார் தளபதி. இவனும் வெளியேசென்றான். தனது நண்பனைத் தூக்கித் தன் மார்புடன் அணைத்துக் கொண்டு ஓடி வருகின்றான். தனது பள்ளத்தில் கொண்டு வந்து கிடத்திவிட்டுத் தொட்டுப் பார்க்கின்றான். நண்பனின் உடலில் உயிரில்லை. அவன் இறந்துவிட்டான்.

தளபதி கேட்டாராம் ‘‘நான் கூறியதைக் கேட்டாயா? பார் இப்போது உன் நண்பனும் இறந்துவிட்டான் உனக்கும் காயங்கள் ஏற்பட்டு விட்டது. இது தேவையா?’’ என்றார்.

அதற்கு அந்த இராணுவ வீரன் கூறினானாம் ‘‘இது பரவாயில்லை சார்! ஏனென்றால் நான் ஓடிச்சென்று பார்க்கும் போது எனது நண்பன் உயிருடன் இருந்தான். அவன் கூறிய கடைசி வார்த்தைகள் என்னதெரியுமா விஜய் எனக்குத் தெரியும் நீ வருவாய் என்று! அதற்காகத்தான் இவ்வளவு நேரமும் உயிரை வைத்துக்கொண்டிருந்தேன் என்றான். அது மட்டுமல்ல சார். தனது பையில் இருந்து இரண்டு நூறு ரூபாய் பணத்தைத் தந்து அவனது தந்தைக்கு அடுத்த வாரம் 80வது பிறந்ததினம் தனது சார்பில் என்னை இந்தப்பணத்தில் பரிசு வாங்கிக்கொடுக்கும்படி கூறினான். நான் போகாமல் இருந்திருந்தால் எனது நண்பனது எதிர் பார்ப்பு தகர்த்தெறியப்பட்டிருக்கும். அது மட்டுமல்லாமல் அவனது அந்தக் கடைசி ஆசையும் நிராசையாகியிருக்கும். எனது உடலில் குண்டு துளைத்தாலும் பரவாயில்லை நான் போனது சரி தான என்றானாம்.

என்று உங்கள் மனது உங்கள் செயலுக்கு ஆமாம் என்று கூறுகின்றதோ அன்று உங்கள் மனம் சாந்தி பெறும்.

என்.டி. ஸ்ரீதரன்

# அமெ. மீண்டும் தடைவிதித்திருப்பது எமக்குக் கவலை தருகின்றது

## துணைப்பொறுப்பாளர் தங்கன்

(கிளிநொச்சி)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுவரும் நல்ல சூழலில் எமது அமைப்பின் மீது அமெரிக்கா மீண்டும் தடைவிதித்திருப்பதாக அறிவித்திருப்பது கவலை அளிக்கும் ஒரு செய்தியாகவே இருக்கிறது. என்று விடுதலைப்புலிகளின் அரசியல்துறைத்துணைப் பொறுப்பாளர் தங்கன் தெரிவித்துள்ளார்.

தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பை வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்பாக அமெரிக்க இராஜாங்க அமைச்சு பிரகடனப்படுத்தியிருப்பது தொடர்பாக கருத்து வெளியிட்ட போதே தங்கன் மேற்கண்டவாறு கவலை வெளியிட்டார்.

இது தொடர்பாக அவா, மேலும கருத்து வெளியிடுகையில்,

கடந்த காலங்களில் எமது அமைப்பு மீது அமெரிக்கா தடை விதித்திருந்தது. இத்தடைவிதிப்பில் எமது அமைப்பின் நடவடிக்கைகளும் அப்போது தொடர்ந்த வண்ணம் இருந்தது.

ஆனால் இன்று நல்லதொரு சமாதான சூழ்நிலை மலரவுள்ள சந்தர்ப்பத்தில் அமெரிக்கா எம் மீது தடைவிதித்திருப்பது பொருத்தப்பாடானதொன்றல்ல.

எமது அமைப்பின் மீது அமெரிக்கா தடை விதிப்பதற்கான காரணம் ஏதும் இல்லாத சூழ்நிலையில் தடைவிதித்திருப்பது எமக்கு ஆச்சரியத்தை அளித்துள்ளது. என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# வெளியுறவுக் கொள்கையை தீர்மானிப்பது ஜனாதிபதியா?பிரதமரா?

## இலங்கையின் இன்றைய சர்ச்சை இது

(கொழும்பு)

பிரதமரின் ஐ.நா.உரை இலங்கையின் வெளியுறவுக் கொள்கையைத் தீர் மானிப்பது யார்? என்ற சர்ச்சை தற்போது தோற்றுவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் கடந்த 26ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரையும் ஜனாதிபதி கோலாலம்பூரில் ஆற்றிய உரையுமே இந்தச் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

ஐ.நா.சபைக் கூட்டத்தில் பிரதமர் உரையாற்றும் போது, ஈராக் மீதான அமெரிக்காவின் ஊடுருவலை ஆதரித்துப் பேசியிருந்ததுடன், ஈராக்கில் அணுவாயுதப் பரிசோதனைகளை மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் சபை உறுப்பினர்களுக்கு ஈராக் பூரண ஆதரவுகளை வழங்கியுள்ள நிலையில், ஈராக் மீது படையெடுப்பை மேற்கொண்டிருக்கத் தேவையில்லை எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேசமயம், அண்மையில் மலேஷியத் தலைநகர் கோலாலம் பூரில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி, ஐக்கிய நாடுகள் சபையின் அனுமதியில்லாது ஒரு நாட்டின் ஆட்சி எல்லைக்குள் படை நடத்துவது தவறு என தெரிவித்திருந்தார்.

இதையடுத்தே,இலங்கையின் வெளியுறவுக் கொள்கைகளைத் தீர்மானிப்பது ஜனாதிபதியா? பிரதமரா? எனும் சர்ச்சையொன்று புதிதாக கிளம்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. (உ-18,63)

# யுத்த நிறுத்தத்தை விடுதலைப்புலிகள் முறையாகக் கடைப்பிடிக்கின்றனர்

## அரசியல் ஆய்வாளர் பி.பி.சிக்கு பேட்டி

(லண்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை முறையாக கடைப்பிடித்து வருகின்றபோதும் அவர்களின் சில செயற்பாடுகள் இன்னும் அவர்களை பயங்கரவாதிகள் என்ற நிலையில் வைத்திருக்கின்றது.

இவ்வாறு இலங்கை அரசியல் ஆய்வாளரும் கனடா நாட்டின் பத்திரிகை ஆசிரியருமான டி. பி. எஸ் ஜெயராஜ் பி.பி.சி. தமிழ் சேவைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துக்கூறுகையில்,

அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே, சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளின் சில செயற்பாடுகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகள் வரிவிதிப்பது அதற்காக ஆட்கள் பலர் கடத்தப்படுவது முஸ்லிம் மக்களுக்கு எதிரான தொடர் ஒடுக்கு முறைகள் மற்றும் மாற்றுக்கட்சிளில் இருந்து விலகியிருப்போரை கொலை செய்வது போன்ற நடவடிக்கைகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டு வருவகின்றதாக குற்றஞ்சாட்டப்பட்டுவருவது ஆகிய வற்றை மிக உன்னிப்பாக அவ தானித்து வருகின்றது.

இவை தவிர இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சவார்த்தையினை மீள ஆரம்பிக்க வேண்டும் என்பதில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு பெரிதும் ஆர்வம் கிடையாது என்றும் அதனாலேயே பேச்சுவார்த்தையினை இழுத்தடித்து கொண்டிருக்கின்றார்கள் என்றும் அபிப்பிராயம் சர்வதேச சமூகத்தில் எ்ழுந்திருக்கின்றது.

இதன் காரணமாகவே கடந்த மாதம் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கோரிக்கைகள் யதார்த்தபூர்வமாக இருக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டிருந்தது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இயல்பு நிலை ஏற்படவேண்டும் என்றும் அதற்கு துரிதமாக அபிவிருத்திகளை மேற்கொள்ளக் கூடிய ஓர் கட்டமைப்பு வேண்டும் எனவும் புலிகள் கூறிக்கொண்டு பேச்சுவார்த்தையில் இருந்து பின்வாங்குவதாக சர்வதேச சமூகம் எண்ணுகின்றது.

சர்வதேச சமூகம் தமிழீழ விடுதலைப்புலிகள் இத்தகைய கடுமையான போக்கில் இருந்து விலகி மீண்டும் சமாதானப்பேச்சில் பங்கு கொள்ளவேண்டும் என்றே எதிர் பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, தமிழீழவிடுதலைப் புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் பாரிஸில் பிரபல சட்ட நிபுணர்களுடன் கூடி ஆராய்ந்த இடைக்கால நிர்வாக சபைக்கான திட்டவரைபை அயர்லாந்திலுள்ள டப்பிளின் நகரில் கூடி மீண்டும் ஆராய்ந்து கொள்வதற்காக அங்கு சென்றுள்ளார்கள்.

இந்த ஆய்வில் தமிழர்கள் அல்லாத சர்வதேச சட்ட நிபுணர்கள்,அறிஞர்களும் கலந்து கொள்வார்கள் என்றும் இவர்கள் தென்னாபிரிக்கா, வட அயர்லாந்து, கிழக்குத் தீமோர் ஆகிய நாடுகளில் நிலவும் பிரச்சினைகள் குறித்தும் ஆராய்வார்கள் என்றும் கூறப்படுகின்றது.

அதேசமயம், சர்வதேச நாட்டு சட்டநிபுணர்கள்,அறிஞர்கள் இவ் ஆய்வு மாநாட்டில் முன்வைக்கும் யோசனைகளில் தமக்கு பொருத்தமான யோசனைகளை சேர்த்துக் கொண்டே தமிழீழவிடுதலைப் புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் தமிழச்செல்வன் தலைமையிலான குழுவினர் நாடு திரும்புவார்கள்.

அவற்றை தமிழீழதேசியத்தலைவர் வே. பிரபாகரனிடம் காண் பித்த பின்னர், தமது யோசனைகளுடன் இணைத்துக்கொள்வார்கள். எனக் கூறப்படுகிறது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (உ-62,10)

## இராசி பலன்

**05. 10. 2003**

**(புரட்டாதி 18,ஞாயிறு)**

**தசமி- பி. ப. 1.03 வரை**

**திருவோணம்- பி.இ.11.40வரை**

**இராகுகாலம் - 4.32 - 6.02**

**சுபநேரம் - 9.02 - 10.32**

**விஜயதசமி,கேதார கௌரி விரதாரம்பம்**

**மேடம்**
எடுத்த காரியம் கைகூடும், பிறருக்கு உதவுதல், தொழில் நன்மை, விருந்து உபசாரம்.

**இடபம்**
சரீரப்பிரயாசை, கலகம், பொருள் விரயம், முயற்சி தாமதம்.

**மிதுனம்**
முழங்கால் வலி, வீண்பகை, காரிய தாமதம், திடீர் பயணம்.

**கடகம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, புதிய முயற்சி, உறவினர் சந்திப்பு, சுப நிகழ்வு.

**சிங்கம்**
அதிக பிரயாசை, முயற்சி பலிதம், மனமகிழ்ச்சி, நல்ல செய்தி.

**கன்னி**
புத்திரரால் கவலை, சிறு வியாதி, வேலைக்கஷ்டம், காரிய தாமதம்.

**துலாம்**
தன்னம்பிக்கை குறைவு, பிரயாணம், அமைதிக்குறைவு, தொழில் நன்மை.

**விருச்சிகம்**
சகோதரர் உதவி, நல்ல வரவேற்பு, காரியசித்தி, தனவரவு.

**தனுசு**
வாக்குவாதம், வேலைக்கஷ்டம், கௌரவக்குறைவு, காரிய தாமதம்.

**மகரம்**
நல்ல முயற்சி, பொருள் சேர்க்கை, பிரயாணம், தெய்வசிந்தை.

**கும்பம்**
பிரயாணம், சுபசெலவு, அமைதிக் குறைவு, காரிய தாமதம்.

**மீனம்**
எதிர்பாராத நன்மை, தனலாபம், நல்ல வரவேற்பு, காரிய சித்தி.

(பழையநேர்ப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

# ஆன்மீக உணர்வுகளை சிறுவர்களிடம் வளர்க்க வேண்டும்

## சண்டிலிப்பாய் கோட்டப் பணிப்பாளர்

(கந்தரோடை)

சிறுவர்களது உரிமைகளை வலியுறுத்தப்படுவதனூடாக சிறுவர்கள் மத்தியில் ஆன்மீக உணர்வுகள் இறைபக்தி என்பனவற்றை வளர்த்தெடுக்க அனைவரும் முன்வர வேண்டும்.

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் அண்மையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சர்வதேச முதியோர், சிறுவர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

பிள்ளைகள் நல்லொழுக்கம், நற்பண்புள்ளவர்களாக வளர்க்கப்படவேண்டும். கல்வி ஒவ்வொரு பிள்ளைகளினதும் அடிப்படை உரிமை என்ற வகையில்,பிள்ளைகளின் தேவைகள்,எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படவேண்டும்.

அவ்வாறு அவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படும் போது தான் அவர்களின் மனநிலையில் விருத்தி ஏற்பட்டு சமூகத்தில் நல்லொழுக்கம் நிலவவும், அத்துடன், ஏழைச்சிறார்களின் வறுமைநிலை ஒழிக்கப்பட்டு அவர்களின் கல்வி நிலையை மேம்பாடடையச் செய்யவேண்டும்.

இதற்கு பிரதேச செயலர் பிரிவு ரீதியாக பல செயற்திட்டங்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.

இதேவேளை,வீட்டிற்கும் நாட்டிற்கும் ஒப்பற்ற சேவையாற்றி ஓய்ந்துள்ள முதியவர்களையும் நாம் மதிக்கவேண்டும். ஒவ்வொரு கருமங்களை ஆற்றும் போதும் முதியவர்களினது ஆலோசனையையும் பெறவேண்டும் என்றார். (உ-103)

*திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து*
*அறனல்ல செய்யாமை நன்று*
— குறள்

வலம்புரி

## அநியாயமான மரணங்கள்

யாழ்.மடத்தடிப் பகுதியில் இராணுவ கனரக வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த அப்பாவி இளைஞர்கள் இருவர் கோரமாகப் பலியான துயரச் சம்பவம் மக்கள் மத்தியில் பெரும விசனத்தை ஏற்படுத்தி விட்டது.

யுத்தம் தந்த இழப்புக்களில் அகப்பட்டு மீளமுடியாத மக்களுக்கு இராணுவ வாகனம் மோதியதால் இளைஞர்கள் இருவர் பலியான நிகழ்வு இழப்பின் துயரத்தை மேலும் அதிகரிக்க, அதன் வெளிப்பாடாக மக்கள் திரண்டு படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தி உள்ளனர்.

இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் தவிர்க்கப்பட வேண்டுமாயின், இராணுவத்தினர் நிதானத்துடன் வாகனங்களை ஓட்டப் பழகிக் கொள்ள வேண்டும். வாகனங்களில் ஏறி உட்கார்ந்து விட்டால் எப்படியும் ஓடலாம் என்ற உணர்வை இராணுவத்தினர் கடைப்பிடித்து வருவதை மக்கள் கடந்த பல வருடங்களாகத் தம் மனங்களில் ஆழமாகப் பதிந்து வைத்துள்ளனர். அதன் வெளிப்பாடாகவே நேற்றைய தினம் இடம் பெற்ற ஆர்ப்பாட்டங்கள் அமைந்துள்ளன.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர் யாழ்.குடாநாட்டில் பொது மக்கள் மீது இராணுவ வாகனங்கள் மோதிய சம்பவங்கள் பல இடம் பெற்றுள்ளன. இதனால் மக்கள் பெரும் விரக்தியுற்று இருந்தனர். எனினும் இராணுவ வாகனத்தை ஓட்டுபவர்கள் மனித உயிர்களை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. தமிழர்கள் என்ற இனவாதக் கொள்கை, கண்மண் தெரியாமல் வாகனங்களை ஓட வைத்தது. இதனால் மனித உயிர்கள் அநியாயமாக அழிக்கப்பட்டன. அதேவேளை வீதியால் செல்கின்றவர்களை மோதி விட்டு எந்த நீதி நியாயங்களுமின்றிப் பலியான பொது மக்களைப் பயங்கரவாதத்துக்குள் சேர்த்து விளக்கம், விசாரணை என்பவற்றை நடத்தி விபத்தில் ஏற்பட்ட பிழையை பலியானவரின் தலையில் சுமத்திவிட்ட மிகக் கொடூரமான நிகழ்வுகள் மக்கள் மனங்களில் இன்னமும் மாறவில்லை. இதனை இராணுவம் புரிந்து கொள்ள வேண்டும்.

சமாதான சூழ்நிலை நிலவும் வேளையில் இராணுவத்தினர் பொறுப்பற்ற முறையில் நடப்பார்கள் ஆயின் அதனால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் வீண் போக வாய்ப்புண்டு.

அதேவேளை பொது மக்கள் நடத்தும் ஆர்ப்பாட்டங்களை மதியாது படையினர் பதில் தாக்குதல்களை நடத்துவார்களாயின் அதன் விளைவு மிக மிகப் பயங்கரமாக அமையும் என்பதும் நினைவிற் கொள்ளத் தக்கதாகும்.

# எமது தவறுகளைத் திருத்துவதால் மட்டுமே உண்மையான உறவுகளை உருவாக்க முடியும்

''நீங்கள் உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்காமல், உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பைக் கூர்ந்து கவனிப்பதேன்" (லூக் 6:41)



இன்று எமது வாழ்வியலை நோக்கிப்பார்க்கின்ற போது, அடுத்தவர் பற்றிக் குறைசொல்வதில் தான் அதிக அக்கறை செலுத்துகினறோம். மாறாக எமது குறைகளை மீட்டுப் பார்த்து அதனைத் திருத்த முயற்சிப்பது இல்லை.

நாம் ஏதாவது தப்புச் செய்து விட்டால் அதற்குப் பரிகாரம் தேடுவதிலும் பார்க்க, அடுத்தவர் மீது அதற்கான பழியைப் போட்டு, நாம் செய்த தவறை சரிபோல நிரூபிக்க முயற்சிக்கின்றோம்.

ஒருவரின் வளர்ச்சிக்கு சமூகம் உறுதுணையாக இருந்தாலும், அந்த சமூக வளர்ச்சிக்கு நாமும் காரணமாக இருக்கின்றோம். இதனை உணர்ந்து எமது நடத்தைக் கோலத்தினால் சமூகம் பாதிப்படையாத வகையில் செயற்படுவது அவசியமானது.

**ஏற்று வாழ்தல்:-**

நாம் தவறையும், தப்பையும் செய்து கொண்டு அடுத்தவரைத் திருத்த முயற்சிப்பது ஒரு போலியான செயலாகும். அதாவது மதுவுக்கு அடிமையான ஒருவர், குடிபோதைக்கு எதிராக பிரசாரம் செய்தாலும்,அதனை சமூகம் ஏற்கத்தயாராக இல்லை. இதனைப் போலதான் சமூக விரோத செயல்களை மறைமுகமாகவும்,வெளியரங்கமாகவும் செய்கின்றவர்கள் சமூக சீர்திருத்தத்தில் இறங்கிச் செயற்பட முடியாது. இதனை சமூகம் ஏற்றுக்கொள்ளவும் மாட்டாது.

''ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடி"என்று சொல்வது போல, மற்றவர்களுக்கு உபதேசிக்கும் பண்புகள் எம்மிடையே அதிகரித்து இருக்கின்றது. ஆனால் அதன்படி நாம் நடக்கின்றோமா என்றால் அது பெரிய கேள்விக் குறியே!

மற்றவர்களை அடிக்கடி குறை சொல்வதினால் உறவுகள் விரிசல் அடைகின்றது. ஆகவே ஆரோக்கிய உறவு மலர வேண்டும் என்றால் மற்றவர்களை நாம் மதிக்க வேண்டும். அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தப் பண்பு எம்மிடையே வளராவிட்டால் பிரச்சினைகள் பெருகும்.

கணவன் தன் மனைவி மீது தினமும குறை சொன்னால் அங்கு உறவில் விரிசல் ஏற்படுகின்றது.பிரச்சினை பெருகி குடும்பத்தையே சிதைகின்றது.இதனால் அவர்களது பிள்ளைகள் பாதிக்கப்படுகின்றார்கள். அயலவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். இறுதியாக விவாகரத்துக்கோ அல்லது தற்கொலைக்கோ வழிவகுகின்றது.

## பரமபிதா காட்டிய பாதை

**ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்:-**

இன்று வளர்ந்தவர்கள் இளைஞர்களை பற்றிச் சொல்லுகின்ற பெரிய குற்றச்சாட்டுகள் ''இப்பத்தைய பிள்ளைகள் படுமோசம்" ஒரு சதத்திற்கு உதவாதுகள். இது சாதாரணமாகப் பேசப்படுகின்ற கருத்துப் பரிமாற்றம். இங்கு வளர்ந்தவர்கள் சிந்திக்க வேண்டும், இக்கருத்துக்களை எதைக்கொண்டு சொல்லுகின்றோம் என்று அடுத்து அக்குற்றச்சாட்டைச் சொல்லுமுன்பு, தம்மிடம் இருக்கும் குறைகளைத் தீர்க்க வேண்டும்.அதாவது குடிபோதை,புகைத்தல், பாலியல் துஷ்பிரயோகம்,கசிப்பு உற்பத்தி, கட்சி பகைமை மற்றும் சமூகவிரோத செயல்களில் தாம் ஈடுபடுவதை முதலில் அகற்றவேண்டும்.

இவை பெரியோரிடம் உள்ளதால் தான் இன்று வளர்ந்தவர்களின் கருத்துக்களை இளைஞர்கள் கேட்க மறுக்கின்றார்கள். ஏனெனில் அவர்களைப் பார்த்தே சாதிச்சண்டையிலும், கட்சிமனப்பான்மையிலும், குடிபோதையிலும் அதிகம் ஈடுபடுகின்றார்கள். வளர்ந்தவர்களே அநேக சந்தர்ப்பங்களில் இவற்றை ஊக்குவிக்கின்றார்கள்.

**எமது உறவைச் சீராக்க:-**

எமது சமூக புலத்தை பார்த்தால் வன்முறைகள் அதிகரிக்கக் காரணம் மற்றவர்கள் மீது குற்றம் சுமத்தி அதனை நிரூபிக்கவும், தம் குற்றத்தை மறைக்கவும் வன்முறையை

**ஆர்.ரி.தனா**

கருவியாகப் பாவிக்கின்றார்கள். இன் றைய சூழலில் அறம்-நீதி-சமய போதனை எல்லாம் ஏட்டளவிலும் பேச்சளவிலும் இருக்கின்றனவே தவிர, செயற்பாட்டில் காண்பது அரிதாகவே இருக்கின்றது. ஆகையினால் இயேசு போதித்ததுபோல எமது குறைகளை நாம் உணர்ந்து திருத்திக் கொள்ள முயற்சிபோம். அப்போதுதான் சமாதானம் மலரும், உறவு நிலைக்கும்.

''பார்வையற்ற ஒருவர் பார்வையற்ற வேறொருவருக்கு வழிகாட்ட இயலுமா? இருவரும் குழியில் விழுவரல்லவா?" (லூக் 6:39)

# யுத்தநிறுத்த உடன்படிக்கையை விட நாட்டின் பாதுகாப்பே மிக முக்கியமானது

## சிஹல உறுமயக் கட்சி பிரதமருக்கு கடிதம்

(கொழும்பு)

குரங்கு பாஞ்சான் முகாம் விடயத்தில் போர் நிறுத்தக்கண் காணிப்புக்குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சார்பாக நடந்து கொள்கின்றனர் என சிஹல உறுமயக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அக்கட்சி பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில், இம்முகாமை ஒருவார காலத்தினுள் அகற்றுவதற்கு பிரதமர் நடவடிக்கை எடுக்காவிட்டால் தெற்கில் இருந்து படையெடுப்பு ஒன்று மேற்கொள்ளப்படும்.

இம்முகாம் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைக்கப்பட்ட போதிலும், அதனை அகற்ற பாதுகாப்பு அமைச்சு இன்னும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை.

இம்முகாமை அகற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது யுத்த நிறுத்த உடன்படிக்கையினை மீறும் செயலாக அமையாது.

மேலும்,தமிழீழ விடுதலைப்புலிகள் கிழக்கு மாகாணத்தில் 17 முகாம்களை அமைத்துள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன குரங்குபாஞ்சான் பிரதேசத்துக்கும், கிழக்கு மாகாணத்துக்கும் எம்முடன் விஜயம் செய்தால், அம்முகாம்களை அவருக்கு நேரடியாக காண்பிக்க முடியும்.

இந் நிலைமை தொடருமானால், கிழக்கு மாகாணத்தில் மட்டு மன்றி, நாடுமுழுவதும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு கட்டுப்பட நேரிடும்.

இப்படிப்பட்ட ஒரு சூழ் நிலையில் யுத்தநிறுத்த உடன்படிக்கையைவிட, நாட்டைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடே அரசுக்கு முக்கியமானது என அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தி-61)

## கரையொதுங்கிய பெட்டிகளால் பம்பலப்பிட்டியில் பரபரப்பு

(கொழும்பு)

பம்பலப்பிட்டி கடற்கரையில் கரையொதுங்கிய இரு உருக்குப் பெட்டிகளால் கடற்கரைப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இவ்விரு பெட்டிகளும் கரையொதுங்கிய பிரதேசத்திற்கு உடனடியாக கடற்படையின் சுழியோடிகள் அனுப்பப்பட்டு தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன்,பெட்டிகளும் பத்திரமாக மீட்கப்பட்டன.

வெளிநாட்டு வர்த்தகக்கப்பல்களில் இருந்து இவ்விரு பெட்டிகளும் தவறுதலாக வீழ்ந்திருக்கலாம் அல்லது வீசப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இது தொடர்பான விசாரணைகளை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(தி-61)

## திசைரி தியானம்

### ஓம் எனும் மந்திரதியானம்

ஓம் என்ற படத்தை உங்கள் முன்வையுங்கள்.நன்றாகக் கண்களைத் திறந்து அப்படத்தைப் பார்த்துக் கொண்டு, அதிலேயே நாட்டம் செலுத்துங்கள்.இம்மந்திரம் பற்றி எண்ணும் போது நிலை பேறுடைமை, எல்லையின்மை, இறப்பின்மை முதலிய எண்ணங்களை ஒன்று சேருங்கள். ''ஓம்" என்பது வேதங்களின் சாரம் ''ஓம்" என்பது வில் என்றும் மனம் என்பது அன்பு என்றும் இறைவன்தான் இலக்கு என்றும் கற்பனை செய்துபாருங்கள். இலக்குடன் ஒன்றி விடுவது போல நீங்கள் கடவுளுடன் ஒன்றி விடுவீர்கள்.

**சுவாமி சிவானந்தர்**

## சிறுவர் முதியோர் தின ஆக்கப்போட்டி முடிவுகள்

(கந்தரோடை)

சர்வதேச சிறுவர் தினம்,சர்வதேச முதியோர் தினம் என்பவற்றை முன்னிட்டு தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட கவிதை மற்றும் கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விபரம் வருமாறு:

### சிறுவர் தினப் போட்டி முடிவுகள்

**பிரிவு I (கவிதை)**

தி.லசிகா- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.
சி. சிவராஜினி-குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை.
கு. பிரியதர்சினி- அளவெட்டி அருணோதயாக்கல்லூரி.

**பிரிவுI (கட்டுரை)**

அ.சாந்தினி- அளவெட்டி அருணோதயாக்கல்லூரி.
அ. அர்ச்சனா- மல்லாகம் மகா வித்தியாலயம்.
இ.முரளிதரன்- தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி.

**பிரிவுII(கவிதை)**

வை.வாமணன்- தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி.
கு.புராதனி- தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரி.
ஆ. அனுசியா-தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரி.

**பிரிவுII (கட்டுரை)**

சி.சிவறஞ்சினி-வசாவிளான் ம.ம.வித்தி.
இ.துளஷா-தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.
தி.காயத்திரி-தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரி.

### முதியோர்தினப்போட்டி முடிவுகள்

**பிரிவுI (கட்டுரை)**

க.ஜானி- தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரி
கௌ.ஸ்ரீகர்சன்-தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரி
பா. சுவேதா-அளவெட்டி அருணோதயாக்கல்லூரி.

**பிரிவு I (கவிதை)**

வை.வாமணன்-தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரி.
கு.புராதனி-தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரி.
பு. செழியன்- வீமன்காமம் மகா வித்தியாலயம்.

**பிரிவுII(கட்டுரை)**

ம.சுதர்சன்-வசாவிளான் ம.ம.வித்தி.
செ.பவானி-வசாவிளான் ம.ம.வித்தி
சி.சசிரேகா-அளவெட்டி அருணோதயாக்கல்லூரி.

**பிரிவுII(கவிதை)**

கு.புராதனி-தெல்லிப்பழை மகா ஜனக்கல்லூரி.
அ.மதுரா-வசாவிளான் ம.ம. வித்தி
வை.வாமணன்- யாழ் மகா ஜனக் கல்லூரி.

(உ-103)

# தமிழ் மக்களைப் பழிவாங்குவதில் இராணுவம் தொடர்ந்து ஈடுபடுகிறது

## விபத்துச் சம்பவத்தைக் கண்டித்து மாணவர் ஒன்றியம் அறிக்கை

கடந்த 3ந் திகதி இராணுவ வாகனம் மோதியதில் இரண்டு இளைஞர்கள் பலியான சம்பவத்தைக் கண்டித்தும் அதனைத் தொடர்ந்து இராணுவம் பொது மக்களுடன் நடந்து கொண்ட செயற்பாடு குறித்தும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையின் விபரம் வருமாறு:

யாழ். தண்ணீர் தாங்கியடிப் பகுதியில் அப்பாவிப் பொதுமக்கள் இருவர் இராணுவ வாகனத்தால் மோதப்பட்டு கொல்லப்பட்டமை இராணுவத்தினரின் தமிழ் மக்கள் மீதான பழி வாங்கும் செயற்பாட்டின் தொடர்ச்சியான ஓர் சம்பவம் ஆகும். யாழ். குடாநாட்டில் அடிக்கடி இடம்பெறும் வீதி விபத்துக்களில் அனேமானவை இராணுவ வாகனங்களாலும் மோட்டார் சைக்கிள் படையினராலும் ஏற்படுத்தப்படுகின்றன. மக்கள் செறிவாக நடமாடும் பகுதிகளில் மிதமிஞ்சிய வேகத்தில் வாகனத்தைச் செலுத்தி அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று வருகின்றனர்.

இந்த வகையில் கடந்த 3ந் திகதி அன்று நடைபெற்ற சம்பவத்தின் போது உணர்ச்சி மேலீட்டால் ஒன்று கூடிய மக்களை இராணுவம் நடாத்திய விதம் கண்டிக்கத்தக்கதாகும். மக்களின் உணர்வுகளிற்கு மதிப்பளிக்காமல் இராணுவமும் பொலிஸாரும் அங்கு பெருமளவாகக் கூடி எம் மக்களை அடக்க முற்பட்டுள்ளனர். இச் சந்தர்ப்பத்தில் அவ்விடத்திற்கு வந்த இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினருடன் இணைந்து மக்களை சமாதானப்படுத்தி அங்கு எவ்வித அசம்பாவிதமும் ஏற்படாமல் தடுக்கும் நோக்குடன் சென்ற விடுதலைப் புலிகளின் போராளிகளை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர் இது புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயற்பாடாகும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தற்போது நிலவும் தற்காலிக போரற்ற சூழலைக் குழப்பும் விதத்தில் இராணுவத்தினர் நடந்து கொண்டுள்ளனர். மேலும் இச் சம்பவத்தில் இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் நடந்து கொண்ட விதம் எமக்கு மிகுந்த வேதனையைத் தருகின்றது. இவர்கள் இனி மேலாவது இத்தகைய பக்கச் சார்பான போக்கைக் கைவிட வேண்டும் என நாம் வேண்டுகின்றோம்.

அதேவேளை, இராணுவத்தினர் இனிமேலும் எம்மக்களை முட்டாளாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டால் மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்பதையே மக்களின் இத்தகைய எழுச்சி காட்டி நிற்கின்றது. அத்தகைய எழுச்சியின் மூலம் எம் தாயகப் பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேற்றப்படும் நிலை உருவாகும் என்பதையும் இராணுவத்தினர் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# படையினரின் தாக்குதலை உடன் தடுத்து நிறுத்த வேண்டும்

## புலிகளின் சமாதான செயலகம் அவசர வேண்டுகோள்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்தில் படையினர் பொது மக்கள் மீது மேற்கொள்ளும் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தி, மக்களைப் பாதுகாக்க வேண்டும் என விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் துணைத் தலைவரிடம் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் மடத்தடியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்கள் இருவர் இராணுவ வாகனத்தினால் மோதுண்டு உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து பொதுமக்கள் ஆத்திரமடைந்து, இராணுவ வாகனத்தை சம்பவ இடத்திலிருந்து அகற்றுவதற்கு படைத் தரப்பினர் மேற்கொண்ட முயற்சிக்கு எதிராகப் பொதுமக்கள் கிளர்ந்தெழுந்தனர்.

இதனால் படையினரும் பொலிஸாரும் கண்மூடித்தனமாக பொது மக்கள்மீது தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவங்களின் எதிரொலியாக நேற்று வீதி மறிப்பு போராட்டங்கள் இடம்பெற்றன. இதன் போதும் படையினரும் பொலிஸாரும் ஆயுதப் பிரயோகம் செய்துள்ளனர். இதில் பொதுமக்கள் பலர் காயமடைந்துள்ளனர்.

அதேவேளை விபத்துச் சம்பவம் இடம்பெற்ற அன்றைய தினம் சமரச முயற்சியில் ஈடுபடச் சென்ற விடுதலைப் புலிகளின் அரசியல் துறை உறுப்பினர்கள் மீதும் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு எதிராக படைத்தரப்பினர் மேற்கொண்டு வரும் இத்தகைய கெடுபிடிகளை நிறுத்தி, மக்களைப் பாதுகாக்க வேண்டுமென சமாதானச் செயலகம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது. (த)

## துப்பாக்கிச் சூட்டில் மூவர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூரில் இனம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண் ஒருவர் உட்பட மூன்று முஸ்லிம்கள் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. முகத்தை மறைத்து பர்தா அணிந்து ஆட்டோ ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்களே துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

## இராணுவம்-மக்கள் மோதல்...

மாறும் பொதுமக்களிடம் கோரினர்.

ஏற்கனவே இளைஞனின் மரணத்தால் கடுப்பேறிப்போயிருந்த பொது மக்கள், இராணுவத்தினரின் கோரிக்கையால் மேலும் கோபமடைந்து, இரு தரப்புக்கும் இடையில் முறுகல் நிலைமை உருவாகி, அந்நிலைமை கட்டு மீறி பெரும் களேபரமாக வெடித்தது.

இதனையடுத்து இராணுவத்தினர் கலகம் அடக்கும் பொலிஸாரை வரவழைத்தனர்.

பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து பொதுமக்களை விரட்ட குண்டாந்தடியடிப் பிரயோகம் மேற்கொண்டதுடன், கண்ணீப்புகைக் குண்டுகளையும் வீசினர். அத்துடன இராணுவத்தினரால் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

பதிலுக்கு பொதுமக்களும் கற்களாலும், பொல்லுகளாலும், போத்தல்களாலும் எறிந்து படையினர் மீது தாக்குதல் நடத்தினர்.

இதனால் அப்பகுதி எங்கும் பெரும் பதற்றம் நிலவியது. வீதிகள் எங்கும் கல்லுகளும் போத்தல் ஓடுகளும் பரவிக் காணப்படுகின்றன. அப்பகுதி எங்கும் ரயர் போட்டு கொளுத்தி விடப்பட்டிருந்தது.

நிலைமை கட்டு மீறிச் செல்கின்ற வேளையில் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் அமைதியை ஏற்படுத்த இரு தரப்புக்களுடனும் பேச்சுக்களை மாறி மாறி மேற்கொண்ட போதும், நிலைமை உடனடியாக சுமுகமாகவில்லை.

இதேவேளை, களேபரத்தின் போது பொதுமக்களின் ஒலி பெருக்கி சாதனங்கள் மற்றும் அவர்களது சைக்கிளகள், மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

அப்பொருட்களைப் பெற்றுத் தருமாறும், படையினரை அப்பகுதியில் இருந்து வெளியேற வேண்டுமெனவும் பொதுமக்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் கோரிக்கை விடுத்தனர்.

நிலைமையை சுமுகமாக்க முயன்ற கண்காணிப்புக் குழுவினர் தமது தலைமைப்பீடத்துடன் பேசுவதற்காக அவ்விடத்தை விட்டு விலகிச் செல்லமுற்பட்ட போதும், பொதுமக்கள் அதற்கு அனுமதிக்கவில்லை. தமது கோரிக்கையை நிறைவேற்றாத வரை கண்காணிப்புக் குழுவினரை வெளியே செல்ல அனுமதிக்க மாட்டோமென பொதுமக்கள் உறுதியாகக் கூறினர்.

இதனால் கண்காணிப்புக் குழுவினரில் ஒரு பகுதியினர் வெளியேறிய போதும் மறுபகுதியினர் இறுதிவரை அப்பகுதியில் நின்று நிலைமையை அவதானித்தனர்.

விபத்துச் சம்பவத்தினால் ஆவேசமடைந்த பொதுமக்கள் படையினரை மூர்க்கத்தனமாக தாக்க முற்பட்டதால உருவான பெரும் களேபர நிலைமை நேற்று மாலை வரை அப்பகுதியில் தொடர்ந்தது. (இ-4-7-43)

## விபத்து...

கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

இதனால் ஆவேசமடைந்த பொது மக்களும் கல்லுகள், கம்பிகள் போத்தல்கள்,பொல்லுகள் கொண்டு படையினரைத் தாக்கினர்.

சரமாரிய இடம் பெற்ற கல்வீச்சு, போத்தல் வீச்சில் இரு தரப்பிலும் பலர் காயமடைந்துள்ளனர்.

பொது மக்களில் காயமடைந்த இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் படையினரில் காயமடைந்தவர்கள் இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பரஸ்பரத் தாக்குதலால் பிரதான வீதி போக்குவரத்துக்கள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பித்தது. அத்துடன் வீதியெங்கும் போத்தல் ஓடுகளும் கற்களும்,தடிகளும் பரவிக் கிடந்தன மரக்குற்றிகள், கற்கள் போடப்பட்டு வீதிகள் மறிக்கப்பட்டிருந்ததுடன் வீதியெங்கும் ரயர்களும் கொளுத்தப்பட்டிருந்தன.

நேற்று முன்தினம் முதல் அங்கு தொடரும் பதற்றத்தினால் கடைகள் யாவும் பூட்டப்பட்டுள்ளன. பிரதான வீதியில் உள்ள பல குடும்பங்கள் அச்சம் காரணமாக இடம் பெயர்ந்துள்ளன.

யாழ்-கண்டி வீதியில் உள்ள மடத்தடி, டேவிற் வீதி, மவுண் காமல் வீதி, இராஜேந்திரா வீதி, புகையிரதக் கடவை வீதி. பஸ்தியான் சந்தி, மற்றும் அயல் பிரதேசமெங்கும் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதிகள் வெறிச்சோடிக்காணப்படுவதுடன் பெரும் பதற்றமும் தொடர்ந்தவண்ணம் உள்ளது. (இ-4.7.43.109)

## பஸ் விபத்தில் 12 பேர் காயம்

(கொழும்பு)

கண்டி தெல்தெனியாவில் நேற்று இடம்பெற்ற பஸ் விபத்தில் 12 பேர் காயமடைந்தனர்.

பஸ்ஸின் சாரதி மற்றும் நடதுநர் உட்பட நால்வரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 24மணி நேர மின் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் 24மணி நேர மின்விநியோகம். இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

காரைநகர் ஆலடிச் சந்தி. ஈழத்துச் சிதம்பரம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மின்விநியோக நிலையங்களை உத்தியோக பூர்வமாக அமைச்சர் திறந்து வைத்தார்.

(க-246)

ACX உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் சேவை
செலூலர் சென்ரர்



உள்நாடு வெளிநாடுகளுக்கு தபால்,
பொதிகளை விரைவில் அனுப்ப வேண்டும் எனில்
எம்மைத் தொடர்பு கொள்ளலாம்



அத்துடன்
கையடக்கத் தொலைபேசிகளுக்கான
- உறைகள் (Cover)
- சாச்சர்கள் (Charger)
- பற்றிகள் (Battery)
- அன்ரனா இணைப்புக்கள் (Extenal Antana)
- சகல கையடக்கத் தொலைபேசித் திருத்தங்களும் வெளிநாடுகளில் இருந்து வரும் கையடக்கத் தொலைபேசிகளின் 'Lock' (Soft Ware Lock) நீக்கியும்
- CLI (உள்வரும் அழைப்புக்களின் நம்பர்)
- Dialog/Mobitel மேசைத் தொலைபேசி இணைப்புகளும் (ஒரு வருட கால உத்தரவாதத்துடன்)

தொடர்புகளுக்கு :
ACX
இல. 8, நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6151, 0777 519440

[C/6527]

ITP
INFORMATION TECHNOLOGY PARK
*under the purview of*
MINISTRY OF REHABILITATION, RESETTLEMENT & REFUGEES
272, Stanley Road, Jaffna, Sri Lanka
e-mail: itp@sltnet.lk Office: 021 222 3641

தகவல் தொழில் நுட்பப் பூங்காவின் புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். விண்ணப்பப் படிவங்களை மேற்படி முகவரியில் இன்று (05-10-2003) தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

**Cetrificate Courses**

| Courses | Duration | |
|---|---|---|
| Ms- Word | 3 | Fee 1000/- |
| Ms- Excel | 3 | |
| Ms- Access | 3 | |
| PageMaker | 3 | |
| CorelDRAW | 3 | |
| AutoCAD | 3 | |

| Courses | Duration | |
|---|---|---|
| Webpage&Graphics Design | 4 | Fee 1800/- |
| C/C++ | 4 | |
| Visual Basic | 4 | |
| Java | 4 | |
| Oragle | 4 | |
| Hardware | 4 | |
| Internet & E-mail | 4 | |
| HTML & Java Script | 4 | |

**Diploma course (on line)**

Diploma in PC Application & Office Management (Including Ms-office Syllabus)
Duration - 3 months Fee - 2750/-
*(Week day batches only)*

குறிப்பு: 1) புதிய பிரிவுகள் யாவும் தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டடத்தில் (கச்சேரி முன்பாக) நடைபெறும் என்பதனைக் கருத்தில் கொள்க.
2) பயிற்சிநெறிகள் யாவும் நவம்பர் மாத முதல் வாரத்தில் இருந்து ஆரம்பமாகும்.

Centre for Information Technology
*For further Details:* *Course Manager*
*Information:* *Director*

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.10.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.